# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

அக்டோபர் 2006 ஜீவியம் 12 மலர் 6

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| எங்கள் குடும்பம் II | 3 |
| கற்றலும் கற்பித்தலும் | 11 |
| அஜெண்டா | 14 |
| லைப் டிவைன் | 16 |
| நிலையான நிதர்சனம் | 34 |
| அன்பர் கடிதம் | 47 |
| தரிசனம் | 49 |
| சாவித்ரி | 56 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 58 |
| லைப் டிவைன் - கருத்து | 61 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 63 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

### ஜீவியத்தின் ஓசை

✡ தன்னுடைய ஆன்மாவை அறிந்தவன் சூழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும் நடுங்க மாட்டான்.

✡ முறை பெரியதா, சிறியதா என்பதில்லை. நம் நிலைக்கு பொருத்தமான முறை பெரும் பலன் தரும்.

# இம்மாதச் செய்தி

**பூவுலகச் சலனம், மேலுலக மௌனம்.**

**சலனத்தின் மௌனம் ஸ்ரீ அரவிந்தம்.**



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**இந்த நேரம் இப்பெருமுதலாளி பார்ட்டிக்கு வந்திருப்பது ஆச்சரியம். இது போன்ற இடங்களில் அவருக்கு மறைமுகமாக advice விஷயம் கிடைப்பதுண்டு:**

- ✡ நேரம் கடுமையானாலும், நிதானம் தவறாமல் செயல்படுவதால் அவர் பெருமுதலாளியாக இருக்கிறார்.
- ✡ அவர் ஸ்தானத்தில் உள்ளவர் மற்றவரிடம் ஆலோசனை கேட்க மாட்டார்கள்.
- ✡ நெருங்கியவர் ஆலோசனை கூறினால் எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.
- ✡ வெளியிடங்களில் பேச்சுவாக்கில் வரும் கருத்தை ஏற்பது (open mind) பரந்த மனப்பான்மை.
- ✡ பரந்த மனப்பான்மை பர்சனாலிட்டியைப் பெரிதாக்கும்.
- ✡ இதில் ஒரு தத்துவம் உண்டு.
- ✡ நாம் என்பது Self, குறுகியது; கண் மூடியது.
- ✡ உலகம் பெரியது Not-self; பிரபஞ்சத்தினளவு பெரியது.
- ✡ நம்மில் அனைத்தும் இருக்கிறதுஎன நினைப்பது சுயநலம், அறியாமை.
- ✡ நம்மை கடந்து வெளியில் ஞானமிருப்பதாக அறிவது அறிவு.
- ✡ அதை மனம் நாடுவது மனம் விசாலமாக இருப்பதாக அர்த்தம்.
- ✡ அந்த மனப்போக்குக்கு அவருக்குத் தேவையான விஷயம் அவரைத் தேடிவரும்.
- ✡ இந்தக் கதையில் அவருக்கு அப்படி பார்ட்னர்மூலம் அன்னை அறிமுகமாகிறார்.
- ✡ அகந்தை அதிகாரம் செய்யும்.

✡ அடக்கம் பணியும்.

✡ இப்பெருமுதலாளி விபரம் தெரிந்துகொள்ள பார்ட்னரைத் தேடி வருகிறார்.

✡ அங்கு பார்ட்னரில்லை என்றபொழுது, தாயார் வீட்டைத் தேடி வருகிறார்.

✡ தேடி வருவது அடக்கம்.

✡ கேட்டுக்கொள்ளும் மனப்பான்மை receptivity ஏற்புத்திறனெனப்படும்.

✡ அவருக்கு வேண்டியது கிடைக்கிறது.

✡ தொழிலாளிகள், அவர்களுக்குள் பிரிவினை ஏற்பட்டு ஸ்டிரைக்கை வாபஸ் செய்கின்றனர்.

✡ தாயார் தாம் வருவதற்கில்லை, வரும் அவசியமில்லை என்பதையும் எரிச்சலின்றி முதலாளி கேட்டுக்கொள்கிறார்.

✡ எதிர்பாராததுபோல் நிலைமை மாறிப் பலன் பெறுகிறார்.

✡ இடம் பெரியது. மனமும் பெரியது.

✡ அதனால் பலன் பெரியது.

✡ பார்ட்னர் முதலாளியைப் பார்க்கப் போகவில்லை என்றாலும், முதலாளி தன்னடக்கத்துடனிருப்பது காரியம் கூடிவரும் என்பதைக் காட்டுகி-றது.

✡ பெரியவனுக்கு வந்த சிரமத்தை முதலாளி விலக்கியது 'காணிக்கை'-யாகக் கருதப்படும்.

“நிச்சயமாக சத்தியம் ஜெயிக்கும். அதில் சந்தேகமில்லை” என்று தம் நண்பர்களிடம் பார்ட்னர் கூறினார். அந்த முதலாளிக்கு இந்தச் செய்தி போயிருக்கிறது. அதை அவர் ஏற்றுக்கொண்டார்:

✡ நிச்சயமாக சத்தியம் நிதர்சனமாகத் தோற்றுக்கொண்டுள்ளபொழுது



'சத்தியம் ஜெயிக்கும்' என்பதை ஒருவர் ஏற்க அவருக்கு சத்தியத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும்.

✡ சத்தியம் 90 பங்கிருந்து ஏதாவது சிறு தவறு நடந்தாலும் சத்தியம் தோற்கிறது. சத்தியம் 40 பங்கிருந்தாலும் சமயத்தில் ஜெயிக்கிறது. முழுப்பொய்யும் ஜெயிக்கிறது.

எப்படி நாம் இவற்றைப் புரிந்துகொள்ள முடியும்?

✡ நம்முள் உள்ள சத்தியம், சத்தியத்தை நம்பினால், வேறு குறைகள் காரியத்தைப் பாதிக்காது.

✡ சத்தியத்தை நம்முள் உள்ளது நம்புவது பொய்யானால் காரியம் கூடி வாராது.

✡ பொய்யே நம்பினாலும், நம் போக்கு - சமூகத்தின் போக்கு - முற்போக்கானால் நாம் ஜெயிப்போம். முற்போக்கு முதல்வனின் - சத்தியத்தின் - போக்கு.

✡ எதை நம்புவது?

✡ நம்முள் உள்ள வாழ்வு மையம் - personality - சத்தியத்தைப் பொய்யைவிட அதிகமாக நம்பினால் காரியம் கெடாது.

✡ அதை எப்படி நாமறிவது?

✡ உள்ளே ஜில்லென்றிருந்தால் சரி.

✡ நாம் பெரியவர் என்றிருந்தால் சரியில்லை.

✡ இந்த முதலாளி சத்தியம் ஜெயிக்கும் என்பதை ஏற்றதே, அவர் சரி எனக் காட்டுகிறது.

✡ இது போன்ற முதலாளிகள் அரசியல் செல்வாக்கு, பணம், அடியாள், மிரட்டல் போன்றவற்றைத் தவிர மற்றதைக் காதில் போட்டுக்கொள்ள மாட்டார்கள்.

✡ போட்டுக்கொள்வது பொருத்தம்.

✡ பார்ட்னர் முதலாளிக்கும் தாயாருக்கும் இடையேயிருந்து பொருத்த-

மாகச் செயல்படுவது சூழலின் அம்சம்.

- ✡ கணவர் இதில் எதிலும் கலந்துகொள்ள முடியாத நிலை. முதலாளியின் நம்பிக்கை, அடக்கம், அதனால் ஏற்பட்ட பலன் அவர் கண்களைத் திறந்திருக்கலாம்.
- ✡ திறந்ததாகத் தெரியவில்லை. இக்குடும்பத்திற்கு இது பெரிய வாய்ப்பு. அன்னையை அபரிமிதமாக அறியும் வாய்ப்பு.

தொழிலாளர்கள் குறித்த தேதியை வரையறையின்றி ஒத்திப் போட்டனர்:

- ✡ முடிவு, சூழலை நிர்ணயிக்கும்.
- ✡ செயல், பிரச்சினையைத் தீர்க்கும்.
- ✡ முடிவின் அளவில் - மனத்தின் அளவில் - செயல் உண்டு.
- ✡ அதுவும் சூழல் பலமானால் பிரச்சினையைத் தீர்க்கும்.
- ✡ முடிவின் பகுதிகள் எண்ணம், விவரம் புரிவது, முடிவு செய்வது, தீர்மானமாவது.
- ✡ இந்த ஒரேயொரு கட்டத்திற்கும் சூழலில் பலன் தெரியும்.
- ✡ முடிவு எடுக்கும் முதலாளி நல்லெண்ணத்திலும் முடிவு செய்யலாம், வேறு வழியில்லை எனவும் முடிவு செய்யலாம்.
    - ❀ இரண்டு முடிவுக்கும் பிரச்சினை தீரும்.
    - ❀ இரண்டும் தீரும் வகை வேறு.
    - ❀ நல்லெண்ணத்தால் முடிவு செய்தால் முழு நல்லபலன் வரும்.
    - ❀ பயந்து முடிவு செய்தால், ஸ்டிரைக் வாபஸ் ஆகும். மற்ற பிரச்சினைகள் தொடரும்.
    - ❀ அருள் செயல்பட்டால் 100% தீரும்.
    - ❀ நம்பிக்கை செயல்பட்டால் 99% தீரும்.



- ✡ எது தீரமுடியாது, தீரவே வழியில்லை என்றிருந்ததோ, அது நாமெல்லாம் அறியாத வகையில் தீரும்படிச் சூழல் மாறுவது அருள்.
- ✡ தொழிலாளர் இரு கட்சியாகப் பிரிவது, எதிர்ப்புக்கு ஜீவனில்லைஎன அறிவிக்கிறது.
- ✡ அரசின் ஆதரவு எல்லாத் தொழிலாளிகட்குமில்லை என்பது அராஜகம் உரிமை கொண்டாடவில்லை. சமயம் பார்த்து சதி செய்கிறதாகப் பொருள்.
- ✡ முதலாளி முயற்சியின்றி தீர்வு எழுவது அருள் செயல்படுவதை, முழுவதும் செயல்படுவதைக் காட்டுகிறது.
- ✡ செய்தி பேப்பர்மூலம் வந்தால், முதலாளி பார்ட்னரை மறந்துவிட்டார் எனப் பொருள்.
- ✡ உதவி பெறுபவர் உதவி செய்பவரை மட்டும் மறப்பது உலக இயல்பு.
- ✡ உலக இயல்பு செயல்படுகிறதுஎனில் அருள் மேலெழுந்தவாரியாகச் செயல்பட்டதாகும்.

இவர்கள்மூலமாகத்தான் அன்னையை அறிந்தேன் என்றவுடன் முதலாளி கணவர் பக்கம் திரும்பிவிட்டார்:

- ✡ உடனே பார்ட்னரைவிட்டு மனம் தாயாரை நாடுவது, தாயாரை விட்டுத் தம்மை நாடும் மனம்என அறிவிக்கிறது.
- ✡ நெருக்கடி பெரியதானால், எவரும் எவரையும் நாடி வருவார்என முதலாளியின் செயல் சொல்கிறது.
    - ❀ இது உலகில் உள்ளது.
    - ❀ இதன் மறுபுறம் நெருக்கடி பெரியதானால், அன்னை எவர் அழைப்பையும் ஏற்று வருவார் என்பது.
    - ❀ நெருக்கடியேயின்றி அழைப்பை - எவர் அழைப்பையும் - அன்னை

ஏற்கிறார் என்பது அருளுக்கு அனைவரும் அன்பர் என்பதாகும்.

❀ முதலாளி கணவர் பக்கம் திரும்புவதும், கணவர் முதலாளி பக்கம் திரும்புவதும் இயல்பு.

❀ பக்தி தாயாருக்குமட்டும் என்றாலும், முதலாளி எதிரில் - அடுத்தவர் எதிரில் - அவர் அன்பரன்று, மனைவிதான்.

❀ அன்னை 'மனைவி' என்ற எல்லைக்குள் இதுவரை செயல் படுகிறார்.

❀ இந்த இடத்தை எந்தக் கணவனும் விட்டுக்கொடுக்கமாட்டான்.

எவரும் விட்டுக்கொடுக்கமாட்டார்.

மனைவி, அந்தஇடம் தரப்பட்டாலும் எடுத்துக்கொள்ள மாட்டார்.

அன்னையுடன் தாயார் பெற்றது சமூக உறவு, ஆன்மீக உறவன்று.

❀ அன்னைக்கேற்ப அனைவரும் நடக்க வேண்டுமானால்,

1. முதலாளி பார்ட்னர்மூலம் செயல்பட வேண்டும்.

   இந்திரா காந்தியை நந்தினி அன்னையிடம் அழைத்து வந்த பொழுது அன்னை இந்திராவிடம் பேசவில்லை. இந்திராவின் கேள்விகள் நந்தினியிடம் கேட்கப்பட்டன. அன்னை நந்தினிக்குப் பதில் சொன்னார்.

2. கணவர் ஒதுங்கி தாயாரை நேரடியாகப் பார்ட்னரிடம் பேச அனுமதித்திருக்க வேண்டும்.

3. தாயார் அதை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

4. கதையில் குடும்பம் கணவருக்குக் கட்டுப்பட்டது என்பதால், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் கணவரே முன்நிற்கிறார்.

முதலாளி - இந்தத் தகராறு தீருமா?

தாயார் - அன்னையை நம்பினால் தீரும். நம் பக்கம் நியாயம் இருந்தால் தீரும்:



✡ நம் பக்கம் நியாயமில்லாவிட்டால், அன்னையை நம்ப முடியாது. அன்னையை நம்பினால், நம் பக்கம் நியாயம் வந்துவிடும்.

✡ பாண்டவர் வனவாசம் போனபொழுது, 13ஆம் நாள் கிருஷ்ண பரமாத்மா "நாம் அனைவரும் போய் இராஜ்யத்தைக் கேட்போம். வேறொரு பஞ்சாங்கத்தின்படி 1 நாள் ஒரு வருஷம். அதனால் 13 வருஷம் முடிந்துவிட்டது" என்றார்.

✡ புதியதாக பாக்டரி கட்டும் இடத்தில் உள்ளூர் ரௌடி ஓர் ஆளை அனுப்பி பெயிண்ட் திருடச் சொன்னான். அப்பையனைப் பிடித்து விட்டனர். ரௌடி அவனுக்குச் சாதகமாக வந்து, முதலாளியைப் பார்க்கப் பிரியப்பட்டான். முதலாளி ராணுவ ஆபீசராக இருந்தவர். விசிலை எடுத்து ஊதினார். இரண்டு ஜவான்கள் வந்து ரௌடியை அறையில் தள்ளி நையப் புடைத்தனர். வெளியே வந்ததும் ரௌடி முதலாளிக்கு சலாம் போட்டு, "இன்று முதல் நீங்களே என் தலைவர். நாளைக்கு என் வீட்டிற்கு விருந்திற்கு வரவேண்டும்" என்றான்.

❀ அடிப்பட்ட ரௌடி அடித்தவரைத் தலைவராக ஏற்பது சட்டத்திற்கு அடங்காத ரௌடி அடி உதைக்கு அடங்கும் நியாயமாகும்.

❀ தொந்தரவே வாய்ப்பு என்பது வாழ்வின் வழக்கு.

❀ நியாயம் என்பது பல நிலைகளில் உண்டு. அன்னை பக்தனுக்கு அத்தனையும் நியாயமே. அடுத்தவரின் அநியாயம் ஆண்டவனின் நியாயம் என்பது அன்பர் இலட்சியம்.

❀ தொடர்ந்து இடர்கள் வந்தால் அது ஆண்டவன் சோதனை.

❀ பிள்ளையைக் கறி சமைத்துக் கேட்டால் 'என்னிடம் உள்ளதைக் கேட்டாரே' என்ற பூரிப்பு'.

❀ குப்புற விழுந்தாலும் அதுவும் அருள் என்பது அன்பர் சட்டம்.

❀ தகராறு தீர்ந்தால் அருள்.

❀ தகராறு தீராவிட்டாலும், முற்றினாலும் பேரருள்.

❀ ஆனந்தமாக சிருஷ்டிக்கப்பட்ட உலகம், ஆனந்தத்தால் சிருஷ்-

**டிக்கப்பட்டது, ஆனந்தத்தில் சிருஷ்டிக்கப்பட்டது, ஆனந்தத்தில் முடிவது என்று உபநிஷதம் கூறும்பொழுது அந்தப் பார்வைக்கு ஆனந்தம் தவிர வேறு எதுவும் தெரியாது. ஏனெனில் ஆனந்தம் தவிர வேறெதுவுமில்லை, எங்குமில்லை, எக்காலத்திலுமில்லை.**

- ❀ **பக்குவம் மாறினால் பார்வை மாறும்.**
- ❀ **பார்வை மாறினால் பவித்திரம் மாறும்.**
- ❀ **குடும்பம் முடிவன்று, உலகம் முடிவன்று, பிரபஞ்சம் முடிவன்று, பரமாத்மா முடிவன்று, பிரம்மமும் முடிவில்லை; பிரம்ம ஜனனம் முடிவு. ஏனெனில் அதுவே முழுமுதற் கடவுள், மூலவன்.**

**மூலமும் முடிவும் முதல்வனே.**

*முற்றும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நிலையில் அமைப்புச் செறிவடைந்தால், அடுத்த நிலைக்குப் போகும்.

***நிலை செறிந்து மாறும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வெற்றியின் இரகஸ்யத்தை விரும்பி அளித்தால், “இரகஸ்யம் வேண்டாம், வெற்றியைக் கொடு” என்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரத் தோல்வி நிச்சயம்.

***தேடும் இரகஸ்யம் நாடி வந்தாலும் விலக்கி,***
***வெற்றியைக் கேட்பான்.***



# கற்றலும் கற்பித்தலும்

என்.அசோகன்

பாடம் கற்பித்தல் என்பது ஒரு வெளி நடவடிக்கையாகும். ஆனால் கல்வி கற்பது என்பது நம்முடைய உள்ளார்வத்தைப் பொருத்ததாகும். அறியாமை மிகுந்த பழங்காலத்தில் கல்வி போதிக்கும் ஆசிரியத் தொழில் ஒரு பெரிய சேவையாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் மனிதனுக்கும் தெய்வத்துக்கும் இடையே பிணைக்கும் கருவியாகச் செயல்பட ஒருவர் தேவைப்பட்டார். அப்படிச் செயல்பட்ட மதகுருமார்களும் பாதிரிமார்களும் எதிர்காலத்தில் தேவையற்றவர்களாகிவிடுவார்கள். இந்தப் புரட்சியை 16ஆம் நூற்றாண்டிலேயே ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் கிங் துவக்கி வைத்தார்.

பரீட்சை என்ற முறையை வைத்துத்தான் மாணவனின் அறிவை மதிப்பிடுகிறார்கள். பழங்காலத்தில் மனப்பாடம் செய்வது பிரதானமாக இருந்தது. வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற பெரிய பெரிய பேச்சாளர்கள் கூட அவர்களுடைய சொற்பொழிவுகளை மனப்பாடம் செய்து வைத்திருந்தனர். எழுதுவதற்குத் தேவையான பேனா மற்றும் பேப்பர் இல்லாத காரணத்தால் இந்தியாவில் மனப்பாடம் அவசியமாகிவிட்டது. வேதங்களைச் சொற்பிழை இல்லாமல் தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றி வர இம்மனப்பாடம் உதவியது என்பதைப் பார்க்கும்போது, மனப்பாடம் என்ற விஷயத்தில் இந்தியர்கள் பெருஞ்சாதனை புரிந்துள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இந்த ஞாபகசக்தி வேறு வகையிலும் உச்சத்தை எட்டியது. அடுத்தடுத்து எட்டுப் பேர் எட்டுத் துறையில் கேட்கும் கேள்விகளை ஞாபகம்

வைத்துக்கொண்டு அதே வரிசையில் பதில் சொல்லும் விற்பன்னர்கள் உருவானார்கள். இதை நூறு கேள்விகளுக்கும் கொண்டு சென்றார்கள். இவர்கள் அஷ்டாவதானி என்றும், சதாவதானி என்றும் அழைக்கப் பட்டனர். ஆனால் ஞாபகசக்தி என்பது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் வருங்காலத்தில் முக்கியத்துவம் இதற்கில்லை. அம்முக்கி-யத்துவம் புரிந்துகொள்ளும் திறனுக்கே கொடுக்கப்படும். உலகம் முழுவதும் பரீட்சைகள் கைவிடப்படுகின்றன. மதிப்பெண்களுக்கு இருந்த முக்கியத்துவம் போய் அதற்குப்பதிலாக விஷய ஞானத்துக்கு முக்கியத்-துவம் வருகிறது. இதே ரீதியில் வருங்காலத்தில் கட்டாயக் கட்டுப்பாடு-களுக்கு முக்கியத்துவம் குறைந்து, மாணவர்கள் தாமாக முன்வந்து ஏற்கும் சுயக்கட்டுப்பாட்டுக்கே முக்கியத்துவம் அதிகரிக்கும்.

வருங்காலத்தில் எழுத்தர்களுக்கும், தட்டச்சு இயந்திரங்களுக்கும் தேவை குறைந்து கம்ப்யூட்டருக்கே முக்கியத்துவம் வரும். போட்டோ நகல் வந்த பிறகு, கார்பன் பேப்பரை வைத்துப் பிரதி எடுப்பது என்பது குறைந்துவிட்டது. இம்மாதிரியே பரீட்சைகளும், தேர்வுகளும் புறக்கணிக்-கப்படும் காலம் வரும். மாணவர்களை அடிக்கும் பழக்கம் அநாகரீகம் என்று கருதப்படும் நிலை வந்துவிட்டது. இதைத் தடுக்க சட்டங்கள் வந்துவிட்டன. வெளிநாடுகளில் குழந்தைகளைப் பெற்றோர்கள்கூட தம் வீட்டில் அடிக்கக்கூடாதென்ற சட்டம் வந்துவிட்டது.

இந்திய நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாகிவிட்டது. ஓய்வு பெறும் காலத்தில் தகப்பனார் வாங்கிய ஊதியத்தை மகன் துவக்கத்திலேயே வாங்குவதை நாம் இப்போது பார்க்கிறோம். சைக்கிள் வைத்திருப்பதைப் பெருமையாக நினைத்த காலம் போய், இன்று நடுத்தர வர்க்கத்தினர் கூட கார் வைத்துள்ளனர். ஏழ்மை, கொடுமை, வேலையின்மை, பட்டினி போன்றவைகளுக்குப்பதிலாக வளமை, கருணை, முழு வேலை மற்றும் சுகஜீவனம் ஆகியவை நம்மை நாடி வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தாழ்ந்தது மற்றும் குறுகியது என்றெல்லாவற்றையும் விட்டுவிட்டு, உயர்ந்ததையும் பரந்ததையும் நாம் நாடுவது நல்லது.



இத்தகைய மனமாற்றம் நம் வாழ்க்கையை ஆன்மீகமயமாக்கும். உள்ளே ஆன்மீகம் பெருகுமளவுக்கு வெளியே வாழ்க்கைத் தரம் உயரும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒவ்வொரு மனிதனும் திருமணம் செய்து கொள்ள வேண்டும், வேலைக்குப் போக வேண்டும், வாழ வேண்டும் என்று நாம் சொன்னால், நாம் சமூகத்தின் எல்லைக்குள் மனிதனை நிறுத்துகிறோம். உயர்ந்த அல்லது பரந்த நிலைக்கு அது உண்மையாகாது.

***சமூகக் கடமைகள் பரந்த நிலைக்கு உண்மையில்லை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஞானம் பெரியதானாலும், பலன் நடைமுறையில் சிறியதாக உள்ளது - பிரம்மத்தின் மௌனத்தை அறிந்தாலும் எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை - என்பதால் முட்டுக்கட்டை போட்டு நெடுநாள் அப்படியேயிருக்க வேண்டி உள்ளது. அதற்குள்ள வழிகளில் ஒன்று, சிறு காரியங்களில் சிறு குறையிருந்தால் அதை நீக்குவது. அதைக் கவனித்து நீக்கினால் அங்குலம் அங்குலமாக வழிவிடும்.

***சிறு காரியத்தின் சிறு குறை நீங்கினால்***
***பிரம்ம ஞானமும் பூர்த்தியாகும்.***

அன்னை அஜெண்டாவில் கூறியவை:

1. ஒரே ஒரு தீர்வுதான் உள்ளது : அருளிடம் நாம் நம்மை முழுமையாக ஒப்படைப்பது.
2. அப்படி நம்மை ஒப்படைக்க நாம் அருளை மட்டும் நம்ப வேண்டும்.
3. நம்மை ஒப்படைக்க, அருளை மட்டும் நாம் நம்ப, பொய் நமக்கு அருவெறுப்பாக இருக்க வேண்டும்.
4. சத்தியம் நமக்கு எட்டும் தூரத்திலுள்ளது. நாம் சத்தியத்தைப் பொருட்படுத்துவதில்லை.
5. மனிதனுக்குப் பொய் அருவெறுப்பானால், உலகம் சத்திய ராஜ்ஜியத்திற்குத் தயாராகும்.

✡ **நமது வாழ்வில் முக்கியக் கட்டங்களை நினைத்துப் பார்த்தால் நமக்குப் பொய் அருவெறுப்பாக இருந்துள்ளதாளனத் தெரியும். எந்த வழக்கு வம்பாக நீடித்ததோ அதில் பொய் அந்தஅளவு கலந்திருக்கும்.**

✡ அது நடந்து 10 ஆண்டானால், இன்று பொய் அன்றைய மனநிலையைவிட அதிகமாக அருவெறுப்பாக இருக்கிறதா? இருந்தால் அருள் செயல்படும்.

✡ **விஷயம் முக்கியமானால் சத்தியத்தைவிட பொய் ருசிக்கிறது, வசதியாக இருக்கிறது, ஆதாயமாக இருக்கிறது என்ற மனநிலை என்றோ, இன்றோ நமக்கிருக்கிறதா? இருந்தால்,**

அருள் தொலைவிலும் நம்மை நோக்கி வாராது.

✡ **விஷயம் பெரியது, சிறியது என்பது அன்னைக்கோ, அருளுக்கோ இல்லை. நமக்குப் பெரிய விஷயம் பயம் தரும். ஒரு சிறிய விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களூர் தியான மையத்திற்குப் போவது அது போன்றது.**

அருளை முழுமையாக ஏற்பது;

அருளிடம் முழுமையாக நம்மை ஒப்படைப்பது;

அருளை மட்டும் நம்புவது;



பொய் அருவெறுப்பாக இருப்பது;

சத்தியத்தை மனதால் எட்டித்தொட்டு ஏற்பது;

சத்தியத்தை மட்டும் ஏற்பது,

**என்ற மனநிலை வளர்ந்து, அது மனத்திற்கு இனித்தால், அம்மன-நிலையுடன் தியான மையத்திற்குப் போனால்,**

**மையம் அருள் மையமாக, அமிர்தமாக இனிக்கும்.**

**அன்னை தரிசனம் நிதர்சனமாகும்.**

**அங்கிருந்து மொபெட் கடைக்குப் போய் மொபெட் வாங்கப் போனால் வரும்பொழுது கார் வாங்கி வருவோம். அது நடந்தால்,**

நாம் அருளுக்குப் பாத்திரமானோம்,

அருளை மட்டும் நம்பியுள்ளோம்என அறியலாம்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

படைப்பான ஒவ்வொரு செயலிலும் நாம் ஆரம்பித்ததிலிருந்து நாமே மறைந்து செயலை வெளியிலிருந்து இரண்டாம் பேர் வழியாகப் பார்க்கலாம். அது பேரானந்தம் தரவல்லது.

***இரண்டாம் நபரால் இதையும் சாதிக்கலாம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அனிச்சைச் செயல், பிறவிப் பழக்கம், பிடித்தம் ஆகியவை கரணங்கள் தாமே செயல்பட உதவுகின்றன. அதுபோல் ஆன்மாவுக்கு அக்னி கருவியாகச் சேவை செய்கிறது.

***அக்னியே ஆன்மாவுக்கு ஆதாரம்.***

## லைப் டிவைன்

கர்மயோகி

# 14. சத்தியஜீவியம் - சிருஷ்டிகர்த்தா

பிரம்மா உலகை சிருஷ்டித்தார். பிரம்மா தெய்வீக மனத்திற்குரிய கடவுள். விஷ்ணுவும், சிவனும் அவர்உடன் உறைபவர்கள். சத்தியஜீவியம் (Supermind) மனத்தைக் கடந்தது. தெய்வீக மனம், மனத்துடையது. பிரம்மா சிருஷ்டித்தார்எனில் மனம் சிருஷ்டித்ததுஎனப் பொருள். ஸ்ரீ அரவிந்தர் உலகை சத்தியஜீவியம் சிருஷ்டித்தது என்கிறார். இந்த அத்தியாயம் அதைக் கூறுகிறது.

பகவான் சத்தியஜீவியத்தைப் பற்றி எழுதினார், அது எவருக்கும் புரியவில்லைஎன அன்னை கூறுகிறார். "புரியவில்லை" என்பதை நாம் எப்படிப் புரிந்துகொள்வது? பகவான் கூறுவதை நாம் ஏற்கிறோம். ஆனால் ஏன் கூறுகிறார்என அறிவதில்லை. சூரியன் பூமியைச் சுற்றி வருவதைக் காண்கிறோம். விஞ்ஞானி பூமி சூரியனைச் சுற்றி வருவதாகக் கூறுகிறார். நாம் அதை விஞ்ஞானி கூறுவதால் ஏற்கிறோம். எப்படிஎன நமக்குப் புரிவதில்லை. கோபர்னிகஸ் அதை முதலில் கூறிய பொழுது அவர் மனம் புரிந்து கொண்டதை உலகுக்குக் கூறினார். மனத்தின் அறிவால் செயல்படுபவர்கள் அதைப் புரிந்து கொண்டார்கள். நாம் கண்ணால் சூரியனைப் பார்க்கிறோம். கண், புலன். அறிவு மனத்திற்குப் புலப்படும். புலனான கண்ணுக்குப் புலப்படாது. அதனால் நமக்குப் புரிவதில்லை. நமக்கு மனம் உண்டு; அறிவு உண்டு. அவற்றால் பூமி, சூரியனைப் பற்றிச் சிந்தித்துப் புரிய முயல்வதில்லை. அதனால் புரிவதில்லை. மனம் மூளைமூலம் செயல்படுகிறது. நமக்கு மூளையுண்டு. அதனால் மனம் என்ற கருவியும், அறிவும் உண்டு. சத்தியஜீவியம் 30,000 ஆண்டுகட்குப்பின் வரப் போவது. அதையறியும் கருவி இப்பொழுது மனிதனிடமில்லை. கருவியில்லாத பொழுது பகவான் விளக்கம் புரியாதது ஆச்சரியமில்லை. அதற்குரிய மையம் நெஞ்சுக்குப் பின்னாலிருப்பதாகப் பகவான் கூறுகிறார். நாம் தியானம் செய்யும் பொழுது நம் மையம் நெஞ்சிலிருப்பதைக் காணலாம். மனத்திலும் இருப்பதுண்டு. நெஞ்சில் தியான மையம் ஏற்படுவதுபோல், நெஞ்சுக்குப் பின்னால் அம்மையம் ஏற்பட்டால் அதற்கு சத்தியஜீவியம் புரியும் என்கிறார். பகவானுக்கு அலிப்பூரில் அந்த அனுபவம் ஏற்பட்டது.

நாம் புலியைக் கண்டால் பயப்படுகிறோம், நெருப்பு சுடும், கொடுமை பிடிக்காது, இனிமை பிடிக்கும், இவை மனத்தின் பார்வை. நல்லது, கெட்டது என்ற பாகுபாடு மனத்திற்குண்டு. நெஞ்சுக்குப் பின்னால் போனால் அது சத்தியஜீவிய மையம். அங்கிருந்து பார்த்தால் புலியைக் கண்டு பயம் எழாது, நெருப்பு சுடாது, கொடுமை பிடிக்கவில்லைஎனத் தோன்றாது. அப்பார்வைக்கு கொடுமையும், இனிமையும் ஒன்றே. குழந்தை பேசும் மழலை நம்மைப் பாதிப்பதில்லை. ரோட்டில் போகும் மனிதன் பேசும் அசிங்கமான சொல் மனத்தில் வெறுப்பை உண்டாக்கும். மழலையை நாம் ஏற்பதைப் போல் சத்தியஜீவியம் அசிங்கமான சொல்லையும் வெறுப்பில்லாமல் ஏற்கும். சித்தி அடுத்த கட்டம் போனால், சத்தியஜீவிய பார்வையுள்ளவர்முன் குழந்தை தெளிவாகப் பேசும்; அசிங்கமான சொல் பேசுபவர் மாறி அழகான சொல் பேசுவார்; புலி பசுபோலிருக்கும். மனம் அறியாமையின் கருவி. புலியின்கொடுமை அறியாமை காண்பது. சத்தியஜீவிய ஞானத்திற்குப் புலி ஒரு பிராணி. கொடுமை அதன் பார்வைக்குத் தெரியாது. சத்திய ஜீவிய சித்தியிலும் பல கட்டங்கள் உள்ளன. பொருள்கள், பிராணிகட்குள்ள உருவம் நம் பார்வையைப் பொருத்தது. சத்தியஜீவியம் முடிவாகப் பலித்தால் பொருள்கட்கு சத்தியஜீவிய ரூபம் ஏற்படும். அது ஸ்ரீ அரவிந்தராகத் தெரியும். குற்றவாளிகள், மரம், கம்பி பகவானுக்கு வாசுதேவனாகத் தெரிந்தது. அது சத்தியஜீவியக் காட்சி. வாசுதேவன் என அவர் கூற

வேண்டியிருந்தது. வாசுதேவனும் தெய்வீக மனத்துடையவர் ஆதலால் அது பொருந்தாது. ஸ்ரீ அரவிந்தர் சத்தியஜீவிய அவதாரம் என்பதால் அது பொருந்தும். நம் காட்சியில் பகவான் தெரிவார். (வாசுதேவன் பிறப்பின் ஆதி சத்தியஜீவியம் என்பதால் அதுவும் தவறாகாது). அக்காட்சி நமக்குத் தெரியும்வரை நாம் மனத்தின் அறிவால் செயல்பட வேண்டும். இந்த அத்தியாயத்தை அறிவால் புரிந்து கொள்ள வேண்டும். அதிலும் இரு பகுதிகள் - மேல்பக்கம், கீழ்ப்பக்கம் - உள. அறிவே முடிவு என்பது கீழ்ப்பகுதி. அப்படிக் கருதினால் அத்தியாயம் புரியாது. அறிவுக்கும் ஓரளவு ஆத்ம தொடர்புண்டு என்றுகொண்டு அறிவால் செயல்பட்டால், ஆத்ம ஞானம் தெரியும் நேரம் உண்டு. இது மேற்பக்கச் செயல். எந்தச் செயலிலும், எந்த நேரமும் இந்த நோக்கம் இருந்தால், நெஞ்சுக்குப் பின்னாலுள்ள மையம் திறக்க ஆரம்பிக்கும். *The Life Divine* புரியும்.

குடும்பம், கம்பனி, மெஷின் ஆகிய உதாரணங்கள்மூலம் சத்திய ஜீவியத்திற்கும், மனத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஓரளவு விளக்கலாம்.

- ✡ **சத்தியஜீவியம் முழுமை.**
- ✡ **மனம் பகுதி.**
- ✡ **பகுதியான மனத்தால் முழுமையை அறிய முடியாது.**
- ✡ **பகுதியில் செயல்பட்டாலும், பகுதியே முடிவில்லைஎன்று நோக்கம் இருந்தால் முழுமை தெரியும் வாய்ப்புண்டு.**

குடும்பத்தில் வருமானம் முழுமை, நிர்வாகம் பகுதி. பலர் உள்ள குடும்பத்தில் ஒருவர் சம்பாதிக்கிறார்; மற்றவர் செலவு செய்கிறார். செலவை நிர்வாகம் செய்கிறார்கள். செலவு செய்பவர்களாலும், செலவை நிர்வாகம் செய்பவர்களாலும் சம்பாதிக்க முடிவதில்லை. நான் வீட்டைப் பராமரிக்கிறேன், அதனால் நான் முக்கியம். நான் சமைக்கிறேன்; அதனால் நான் முக்கியம் என்பவர் மனத்திற்கு ஒப்பாவார். சம்பாதிப்பவர் சத்தியஜீவியத்திற்கு ஒப்பாவார். சம்பாதிப்பவர் வருமானத்தைக் கொண்டு வந்தால் நிர்வாகம் செய்பவர் செய்ய முடியும். சம்பாத்தியம்



முழுமை. நிர்வாகம்செய்பவரைச் சம்பாதிப்பவர்என நினைப்பது தவறு. சத்தியஜீவியம் உலகை சிருஷ்டித்தது. பிரம்மா நிர்வாகம் செய்கிறார். பிரம்மா சிருஷ்டிக்கவில்லைஎன ஸ்ரீ அரவிந்தம் கூறுகிறது.

முழுமை, பகுதிஎன்ற அம்சம் எல்லாச் செயல்களிலும் உண்டு. நாம் எந்தப் பகுதியிலிருக்கும் உரிமையும் நமக்குண்டு. பகுதியிலிருந்து நாம் முழுமைக்கு ஒரு செயலில் மாறினால், அச்செயலில் பலன் 10 மடங்கு, 100 மடங்கு, 1000 மடங்குஎனப் பெருகும். அப்படி அபரிமிதமாகப் பலன் பெருகினால் நாம் மாறினோம்எனப் பெயர். பகுதியினின்று, முழுமைக்கு மாறுவதுஎனில் மனத்தினின்று சத்தியஜீவியத்திற்கு மாறுவதாகும். எப்படி மாறுவதுஎன்பது கேள்வி. மாற்றம் பல கட்டங்களில் உண்டு. கட்டத்திற்குத் தகுந்தவாறு பலன் உண்டு.

| | | |
|---|---|---|
| முதற்கட்டம் | - | செயலில் திறமை 100% இருப்பது 10 மடங்கு பலன்தரும். |
| இரண்டாம் கட்டம் | - | செயலில் நல்லெண்ணம் 100% இருப்பது 100 மடங்கு பலன்தரும். |
| மூன்றாம் கட்டம் | - | செயலில் சமர்ப்பணம் வந்து, நிலைத்து, நிறைவு பெறுவது முடிவானது. |

இம்மாற்றத்திற்கு அடிப்படையாக உதவுவது பகுதியை நம்பாமல் முழுமையை நம்புவது. அதாவது நம்மையோ, நம் திறமையையோ, நம் வேலையையோ நம்பாமல் அன்னையையும், நம்பிக்கையையும் (faith), சமர்ப்பணத்தையும் நம்புவது மாறஉதவும்.

இந்த அத்தியாயத்தின் கருத்துகள் (பாரா நம்பருடன் எழுதுகிறேன்):

1) **சத்தியஜீவியத்தை நாம் விளக்க முடியும், அடைய முடியும்.**
2) **நமக்கும் சத்தியஜீவியத்திற்கும் உள்ள முரண்பாடு, விளக்க முடியுமா என்ற ஐயத்தை எழுப்புகிறது.**

3) சத்தியஜீவியம் உலகையும், மனத்தையும் சிருஷ்டித்தது என்பதால் விளக்க முடியும்.

4) வேதம் என்ன கூறுகிறது?

5) ஆகாயத்தைவிடப் பரந்தது, ஜோதிமயமானது, சத்தியம், ஜீவியம் பெறுகிறது, இறைவனின் திருவுள்ளம் என்றகருத்துகள் சத்திய ஜீவியத்தைப் பற்றி வேதத்தில் காணப்படுகிறது.

6) இதன் பகுதிகளும் உண்டு.

7) இவ்விளக்கம் சத்தியஜீவியம் சச்சிதானந்தத்திற்கும் உலகுக்கும் இடைப்பட்டதாகக் காட்டுகிறது.

8) சிருஷ்டியின் சூத்திரம்.

9) ஏன் சச்சிதானந்தம் உலகை சிருஷ்டித்திருக்க முடியாது?

10) மனம் உலகை சிருஷ்டிக்கவில்லை என்ற விளக்கம்.

11) மனம் தன்னையறியும், உலகையறியாது.

12) பிரபஞ்சத்தின் மூன்று நிலைகள்.

13) Real-Idea சத் தன் முழு எண்ணத்தால் சிருஷ்டிக்கும் முறை.

14) புருஷன் பிரகிருதியை சக்தியாலும் ரூபத்தாலும் எண்ணத்தால் சிருஷ்டிக்கிறான்.

15) மனமும், எண்ணமும் உலகை விட்டு நம்மைப் பிரிக்கின்றன.

16) சத்தியஜீவியத்தில் எண்ணம் அதுபோல் உலகை விட்டுப் பிரிவது இல்லை.

17) ஞானமும், செயலும் சத்தியஜீவியத்தில் நெருப்பும் ஒளியும்போல் ஒன்றாக இருக்கின்றன.

18) ஒன்றின்பின் உலகம் உள்ளது. அதை சத்தியஜீவியம் எப்படிச் செய்கிறது?

19) ரிஷிகள் சத்தியஜீவியத்தை உணர்ந்த வகை.

1) முதற்பாராவில் உள்ள கருத்துகள்:



❀ மனத்தைவிட உயர்ந்த ஞானமும், செயல்திறனுமுள்ள சிருஷ்டிகர்த்தா உலகுக்கும் சச்சிதானந்தத்திற்கும் இடையேயுள்ளது. இதை சத்திய ஜீவியம் என்கிறோம்.

❀ இது நாம் அறியாததில்லை.

❀ நம்மிலிருந்து வெகுவாக மாறுபட்ட ஜீவன் பெற்ற ஞானமில்லை இது. நாம் அதனுடன் பேச முடியாது என்பதில்லை.

❀ அது சிகரத்திலுள்ளது. என்றாலும் அது நம்முடைய சிகரமே.

❀ நாம் அதைப் புரிந்துகொள்ளலாம் என்பதுடன், அது நமக்குச் சித்திக்கும்.

❀ நம்மை இழக்கும் நேரத்தில் நாம் மெதுவாக இந்த உயரத்தை எட்டிப் பிடிக்கலாம். மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட முயற்சியால் நாம் அங்கு நிரந்தரமாக உறைய முடியும்.

❀ நாம் இறங்கி உலகத்திற்கு வந்தால் திறந்த கதவு மூடிக்கொள்ளும். மீண்டும் திறந்தாலும் மறுபடியும் மூடிக்கொள்ளும்.

❀ நாம் நம் ஆத்மாவைக் கரைத்து அழிக்க முயலாமல், திருவுள்ளப்படி அதைப் பூர்த்தி செய்ய முயன்றால் அங்கேயே நிரந்தரமாகக் குடியிருக்கலாம் (மோட்சம் ஜீவனை அழிக்கும்).

❀ இதுவே ஆதிலட்சியம். முடிவான சுமுகம். இதுவே நாம் உலகில் சாதிக்க முயல்வது.

(நம் ஜீவன் உடல், உயிர், மனம், ஆத்மா என்ற பகுதிகளாலானது. தபஸ்வி ஆத்ம விடுதலையை நாடுகிறான். அதற்கு உடல், உயிர், மனம் தடை. அதனால் தவத்தால் ஆத்மாவை அவற்றிலிருந்து பிரிக்கிறான். பிரித்தவன் பெறுவது விடுதலை. அவனை ஜீவன் முக்தன் என்பர். அது பெரிய சித்தி. அடுத்த கட்டமும் உண்டு. பரமாத்மாவை நோக்கி விடுதலை பெற்ற ஆத்மா சென்றால் பரமாத்மாவில் ஜீவாத்மா கரையும். இது மோட்சம். திருவுள்ளம் இதன்று. உடலில் ஆன்மா உண்டு. உயிரிலும் ஆன்மா உண்டு. மனத்திலும் ஆன்மா உண்டு. அவை வெளிப்பட்டால்

ஆத்மா வளரும். வளரும் ஆத்மா பிரம்மத்தை நோக்கி வளரும். ஆத்மா வளர ஆரம்பித்தால் தீயவை இருக்கா. தவத்தால் ஆத்மாவைக் கரைப்பதற்குப்பதிலாக, ஜீவனின் எல்லாப் பகுதிகளிலும் ஆத்மா வெளிப்பட்டு வளர்வது, பிரம்ம ஜனனத்தில் முடியும். அது ஸ்ரீ அரவிந்தம் அளிக்கும் அற்புதம்).

**2) சத்தியஜீவியத்தை நாம் விளக்க முடியும், அடைய முடியும்.**

- ❀ **மனித அறிவுக்குப் புலப்படுவதுபோல் சத்தியஜீவியத்தை விளக்க முடியுமாஎனச் சந்தேகம் எழலாம்.**
- ❀ **சத்தியஜீவியம் அரிதானது என்பதால் இவ்வையம் எழவில்லை. அது நாம் நிரூபிக்கக் கூடியதில்லை என்பதாலும் எழவில்லை.**
- ❀ **மனம் செயல்படுவதும், சத்தியஜீவியம் செயல்படுவதும் முரணாக உள்ளன. அந்த நடைமுறை முரணானது. தத்துவமும் முரணானது. அதனால் இந்தச் சந்தேகம் எழுகிறது.**

**3) உலகை சிருஷ்டித்தது சத்தியஜீவியம். நம் மனத்தை சிருஷ்டித்ததும் அதுவே. மனம் நமக்குச் சொந்தம். உலகில் நாம் வாழ்கிறோம். எனவே நாம் அதை விளக்க முடியும்.**

- ❀ **நமக்கும் அதற்கும் தொடர்பில்லைஎனில் அதை விளக்க முடியாது.**
- ❀ **சத்தியஜீவியம் ஞானம் மட்டும் என்றால் நாம் அதை நிஷ்டையில் அடையலாம், விளக்குவது இயலாது. அது சிருஷ்டிகர்த்தா. செயல்படும் சக்தி என்பதால் கட்புலன் அறியக்கூடியது. எனவே விளக்க முடியும்.**
- ❀ **உலகை இது சிருஷ்டித்தது என்பதால் இது ஞானமாக மட்டுமிருக்க முடியாது. சக்தியாகவுமிருக்கும். மேலும் இது ஞானம் மட்டும் பெறும் சக்தியில்லை. செயலை நடத்தும் சக்தி. ஞானத்தைமட்டும் பெறலாம் எனில் பெறுபவர் எடுத்துச் சொல்ல முடியாது. செயலை நடத்துவதால், செயல் கண்ணுக்குத் தெரியும். தெரிவதை விளக்க முடியும்.**
- ❀ **மனம் சத்தியஜீவியத்தினின்று எழுந்தது. அதனால் மனம் திரும்ப சத்தியஜீவியத்தை அடைய முடியும். மனம் அதை அடையலாம்எனில் மனத்தின் அறிவு அதை விளக்க முடியும்.**
- ❀ **சத்தியஜீவியத்தின் சாரம் மனத்துள் புதைந்துள்ளது. நடைமுறையிலும், செயல்படும் வகையிலும் மனம் நேரெதிராக இருந்தாலும், சத்தியஜீவியச் சாரம் மனத்திற்குண்டு.**
- ❀ **அதனால் அவற்றை ஒப்பிட்டால் பலன் பெறலாம்.**
- ❀ **அது போதுமானதாக இருக்காது. என்றாலும் சுட்டிக்காட்டப் பயன்படும்.**
- ❀ **மேலும் மனம் சில உயர்ந்த கட்டங்களை அடைய முடியும். இவை சத்தியஜீவியத் தொடர்புள்ளவை என்பதால் புரிய வாய்ப்புண்டு. நிலையாக சத்தியஜீவியத்தில் தங்க இதுவரை மனிதனால் இயலவில்லை.**

**4) வேதம் கூறுவது என்ன?**

- ❀ **உலகம் சரிவர அறியாத சத்தியஜீவியத்தைப் பற்றி வேதம் ஏதாவது கூறுகிறதா?**
- ❀ **நாம் ஆரம்பிக்க ஓரிடம் தேவை. அதற்கு ஒரு பெயரிட வேண்டும் அன்றோ!**
- ❀ **சத்தியஜீவியம் என்ற சொல் தெளிவற்றது. மனத்தைப் போல் உயர்ந்த நிலைஎனக் கொண்டால் தத்துவம் தடம்மாறிப் போகும். மகாத்மா காந்தியைப் பெரிய மனிதர் என்றால், உயரமாக அதிக எடையுள்ளவர் எனக் கொள்ளும் வாய்ப்புண்டு. காந்திஜீ ஆத்மாவில் பெரியவர்எனக் காட்ட அவரை மகாத்மா என்கிறோம். சத்தியஜீவியத்தின் உண்மையை எடுத்துரைக்கும் சொல்லில்லை.**

**5) வேதம் சொல்லிய சொற்கள்:**

- ❀ **வேதவாக்கு சுட்டிக்காட்டும். திரை மறைவிலுள்ள பொருளெனத் தெரியும்.**
- ❀ **அதன்மூலம் மனத்திற்கு எட்டாத பரவெளியென நாம் சத்திய**

**ஜீவியத்தை அறிகிறோம். அங்கு சத்தியம் அதன் அரங்குடன் ஒன்றியுள்ளது. குடிகாரத் தகப்பனார் மகனைக் குடிக்கக்கூடாது என்றால் அச்சொல்லில் உண்மையுண்டு. அதைச் சொல்ல அவருக்கு உரிமை இல்லை. குடிப்பழக்கமில்லாதவர் அதைக் கூறினால் சொல்லுக்குச் செயலின் உண்மையுண்டு.**

❀ **உண்மைக்கு உருவம் உண்டு, உருவகம் உண்டு, அதற்குரிய ஏற்பாடு உண்டு, அதை வெளிப்படுத்தும் சொல்லுண்டு, செயலுண்டு. அவை சட்டமாக மாறும்.**

**பரந்த அனைத்தையும் தன்னுட் கொண்ட ஞானம்.**

**ஜோதிமயமான சத்தியம்.**

**ஜீவனின் சுமுகம். அப்பரவெளியில் பரவுகிறது.**

**தெளிவற்ற குழப்பமன்று.**

**தன்னை இழந்த இருளன்று.**

**சட்டத்தின் சத்தியம் ஜீவனின் சுமுகத்தை வெளிப்படுத்தும்.**

**செயலும் ஞானமும் ஜீவனின் சத்தியச் சுமுகத்தையுடையவை.**

**- இவை வேதத்தில் காணப்படும் குறிப்புகள்.**

❀ **தெய்வங்களின் இரகஸ்யம் பிறந்த இடம் சத்தியஜீவியம்.**

**அவை அங்கு உறைகின்றன. அதுவே அவர்க்குரிய இடம்.**

**தெய்வங்கள் தங்கள் ஞானத்தை உணர முயன்றால் 'சத்தியம், ஜீவியம்' பெறும்.**

**அது ரிஷியின் திருஷ்டி.**

**தெய்வங்களின் சித்-சக்தி வேலை செய்ய ஆரம்பித்தால் அவை தவறுவதில்லை, தடம் பிறழ்வதில்லை.**

**இங்கு ஞானமும் திறமையும் இணைந்துள்ளன.**

**யோசிக்காமல் செயல்பட முடியும். அச்செயல் பலன் தரும்.**

**தெய்வீகச் சுபாவத்திற்கு இரண்டு திறனுண்டு.**

**இயல்பாக தானே செயல்படுவது ஒன்று. இதன்மூலம் சாரம் வெளிப்படும். ஆதியான சத்தியம் செயல்படும். ஜோதியின் சக்திக்கு அதே திறனுண்டு. அது இரண்டாவது.**

(நமக்கு அறிவுண்டு. இருந்தாலும் எல்லாச் சமயங்களிலும் நாம் அதைப் பயன்படுத்துவதில்லை. சில சமயங்களில் பயன்படுத்த முடியாமற் போகிறது. அதே போல் தெய்வங்கட்கு சத்தியஜீவிய சக்தி அடிப்படையில் இருந்தாலும் அது நிச்சயமாகப் பயன்படும்எனக் கூற முடியாது. சிவபெருமான் பஸ்மாசூரனுக்கு வரம் கொடுத்தபின் செய்வதறியாது திகைத்தார். சபிக்கப்பட்டவர் தெய்வங்களை நாடினால் சாபத்தைக் குறைக்க முடியுமே தவிர அழிக்க முடியாது. சிவபெருமானே நக்கீரனைச் சபித்தார். இக்குறைகள் சத்தியஜீவியத்திலில்லை).

**6) இதன் பகுதிகள்:**

❀ **பகுதிகள் பல; அவை முக்கியமானவை. அவை ஞான திருஷ்டி, அசரீரி.**

❀ **நாம் அவற்றை ஞானோதயம், தானே தோன்றுவது என்கிறோம்.**

❀ **சத்தியஜீவியத்தை இரு பகுதிகளாகக் கூறுகிறார். (1) காலத்தைக் கடந்தது (2) காலத்திற்குட்பட்டது.**

**இவை வேதக் குறிப்புகள்.**

**7) சத்தியஜீவியம் சச்சிதானந்தத்திற்கும் உலகுக்கும் இடைப்பட்டதாகும்.**

❀ **மேற்கூறிய விளக்கம் இடைப்பட்ட நிலையைக் கூறுகிறது.**

❀ **சிறிய பகுதி பெரிய பகுதியினின்று வெளி வந்து மீண்டும் அதை அடைவதையும் அறிகிறோம்.**

❀ **மேற்பகுதி: ஐக்கியமான சச்சிதானந்தம்.**

**கீழ்ப்பகுதி: ஐக்கியத்தை அறிய முடியாத மனம்.**

**மனம் பகுதிகளைச் சேர்த்துப் பார்க்கும். அது முழுமையாகாது.**

**ஒரு மெஷினின் எல்லாப் பகுதிகளையும் பிரித்திங்கு கூடையில் போட்டால் எல்லாப் பகுதிகளுமிருப்பதால் அது மெஷினாகாது. அதனால் முழுமைப் பகுதிகளின் தொகுப்பைக் கடந்தது என்கிறோம்.**

பகுதிகளை மெஷினாக இணைக்க பகுதிகளில்லாத இன்ஜினீயரிங் ஞானம் தேவை. அது முழுமையாகும். ஒரு வீட்டிலுள்ள 6 நபர்கள் சேர்ந்தால் வீடாகும், குடும்பமாகாது. குடும்பமாக பிரியம், பொறுப்பு, பாசம் தேவை. இவை முழுமையின் குணங்கள்.

❀ முழுமைக்கும், பகுதிகளுக்கும் உள்ள வேறுபாடு சத்திய ஜீவியத்திற்கும், மனத்திற்கும் உள்ள வேறுபாடு. ஒரு கம்பனியில் மானேஜர், சூபர்வைசர், தொழிலாளிகள் உண்டு. வேலையுண்டு, பணம், மார்க்கட், திறமை, உற்பத்தி, விற்பனையுண்டு. முதலாளி இத்தனையும் உற்பத்தி செய்கிறார். இத்தனையும் அவருக்குட்பட்டது. முதலாளி இல்லாமல் இத்தனையும் சேர முடியாது. சேர்ந்தால் கம்பனியாக செயல்பட முடியாது.

8) சிருஷ்டியின் சூத்திரம்:

❀ மேலே ஏகனான சச்சிதானந்தம் அழியாதது; அனந்தமானது.

கீழே அநேகனான அழியக்கூடிய உலகம் உண்டு. அழியும் உலகில் அழியாத நிலையானதைத் தேடுகிறது சிருஷ்டி.

❀ ரிஷி நிஷ்டையில் புலனைக் கடந்து, உலகைக் கடந்து, உள்ளத்தைக் கடந்து விவரிக்கவொண்ணாத பிரம்மம் என்ற ஒன்றைக் காண்கிறார். புறத்தில் மரம், செடி, மலை, மனிதன் என்ற பலவான சிருஷ்டி நிறைந்த உலகைக் காண்கிறார். பிரம்மத்தினின்று உலகம் வந்ததென அறிகிறார்; கூறுகிறார். எப்படி வந்ததெனத் தெரியவில்லை என்கிறார். பிரம்மம் உலகை சிருஷ்டித்தது என்றார்.

பிரம்மம் அழியாத நிலையான ஒன்று. உலகம் அழியும் ஆயிரம் பொருள்கள். இவற்றிடையேயுள்ள சத்தியஜீவியம் ஒன்றிலிருந்து பலவற்றை உற்பத்தி செய்கிறதுஎன ஸ்ரீ அரவிந்தம் கூறுகிறது. உற்பத்தி செய்யும்பொழுது பல ஒன்றுடன் உள்ள தொடர்பை இழப்பது இல்லை. அதுவே சிருஷ்டியின் சூத்திரம்.

எண்ணம் சொல்லாக வெளிவருகிறது. எண்ணம் சொல்லை உற்பத்தி செய்கிறது. எண்ணத்தை ஒன்று எனவும் சொல்லைப் பலவாகவும்



கருதலாம். 'நாளை நான் உங்கள் வீட்டிற்கு வருகிறேன்' என்பது எண்ணமானால் அந்த 5 சொற்களை 'வருகிறேன் நாளை வீட்டிற்கு உங்கள் நான்' எனக் கூறினால் சொல் எண்ணத்தை வெளிப்படுத்தாது. மேலும் சொல்லின் எழுத்துகளைப் பிரித்து இஷ்டப்படிக் கலந்து (உ.ம். 'உங்கள்' என்பதை 'க, ள், உ, ங்' எனக் கலந்தால்) பேசினால் குழப்பமாக இருக்கும். எண்ணம் சொல்லாக வெளிவரும்பொழுது எண்ணத்தின் முழுமை அழியாதவாறு சொல் வெளிப்படுவது சிருஷ்டி. அதை மனம் செய்ய முடியாது. சத்தியஜீவியம் செய்யும். எனவே சூத்திரம்: முழுமையிலிருந்து முழுமையை இழக்காதவாறு எழும் பகுதிகளின் அமைப்பு உலகம்.

✰ மேலே ஒன்றான சச்சிதானந்தம்.

கீழே பலவான உலகம் இருப்பது உண்மையானால் இவற்றைக் கடந்து இவற்றை கடந்த ஒன்று இருப்பதை அவை குறிக்கும். கடையில் பல பொருள்கள் விற்கின்றன. நாம் அவற்றை வாங்குகிறோம் எனில் நம்மையும், கடையையும் கடந்து பொருள்களை உற்பத்தி செய்யும் பாக்டரி ஒன்று இருப்பதாக நமக்குப் புரியும்.

✰ உலகம் பகுதிகளாலானது.

சச்சிதானந்தம் முழுமையாலானது.

பகுதி என்பது குணம், முழுமை என்பதும் குணம்.

இரு குணங்களைக் காண்கிறோம். குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம் இருக்க வேண்டுமல்லவா? அது குணங்களைக் கடந்தது அல்லவா? அதுவே பிரம்மம்.

✰ நமக்கு பிரம்மம் புரிந்தால் சச்சிதானந்தம் என்ற கடவுளும், உலகமும் புரியும். அவற்றிடையே முரண்பாடிருக்காது.

9) ஏன் சச்சிதானந்தம் உலகை சிருஷ்டித்திருக்க முடியாது?

❀ சச்சிதானந்தம் முழுமையானது. முழுமையை மட்டுமுடையது. உலகம் பகுதிகளாலானது. பகுதிகளாலான உலகை முழுமையை இழக்க

முடியாத சச்சிதானந்தம் சிருஷ்டித்திருக்க முடியாது.

பெரிய மரத்துண்டை பலகை, சட்டங்களாக்கி நாற்காலி செய்கிறோம். சச்சிதானந்தம் பெரிய மரத்துண்டு போலாகும். வாழ்வு, உலகம் நாற்காலி போலாகும். செய்வது தச்சன். மரத்துண்டு தன் முழுமையை இழக்காமல் நாற்காலி ஆக முடியாது.

**10) மனம் உலகை சிருஷ்டிக்கவில்லை என்ற விளக்கம்:**

❀ உலகம் பகுதிகளாலான முழுமை. சச்சிதானந்தம் பகுதிகளற்ற முழுமை. நாற்காலியின் பகுதிகள் கால், பலகை, சட்டம் ஆகியவை நாற்காலிக்கு அவசியமானாலும், அவை தானே சேர்ந்தால் (ஒரு பெரிய கூடையில் அவற்றைப் போட்டால்) நாற்காலியாகாது. தச்சன் அவற்றை அதற்குரிய ரூபம் கொடுத்தால் நாற்காலியாகும். மனம் பகுதிகளாலானது. பகுதிகள் சேர்ந்து முழுமையான நாற்காலியாக முடியாது. ஒரு தச்சன் அதைச் செய்ய வேண்டும்.

**11) மனம் தன்னையறியும், உலகையறியாது.**

❀ ஒரு கம்பனியில் வேலை செய்யும் தொழிலாளி தன் வேலையை நன்கு அறிவான். அவனுக்கு, கம்பனியைப் பற்றி அதிகம் தெரியாது. பொதுவாகத் தெரியும். தன்னையறிவதுபோல் கம்பனியை அறிய மாட்டான்.

ஒரு பெரிய விஷயத்தைப் பற்றி முடிவு செய்ய கூட்டம் போட்டு விருந்து வைத்தால், சமையல்காரனுக்கு விருந்து அம்சங்கள் அத்தனையும் தெரியும், ஏன் கூட்டம் நடக்கிறது, என்ன முடிவெடுத்தார்கள்என்பது அவன் அறியாதது, அறிய முடியாதது. அறிந்தால் அபத்தமாக அறிவான்.

மனம் பகுதியானது. பகுதியை ஆராயவல்லது. ஆராய்ந்து ஆராய்ச்சி விவரங்களைத் தெளிவாகக் கூறும். எந்த முழுமையின் பகுதியை ஆராய்ந்தோம்என மனம் அறியாது. இராமாயணப் பிரசங்கத்தில் தூங்கியவன் மீது அடுத்தவன் சாய்ந்து தூங்கி எழுந்தபின்



இராமாயணம் பாரமாக இருந்தது என்ற கதை மனம் உலகை அறியும் பாணியைக் கூறுகிறது. இராமாயணம் மனத்தில் பாரமாக மாறுகிறது. மனம் விஷயத்தை அறிய முடியாமல் விவரங்களை அறியும்.

**12) பிரபஞ்சத்தின் மூன்று நிலைகள்:**

1) முழுமையான சச்சிதானந்தம்.

2) பகுதிகளின் தொகுப்பான உலகம்.

3) முழுமை, தன்னைப் பகுதிகளாக்கி, பகுதிகள் முழுமையை இழக்காத-வாறுள்ள சத்தியஜீவிய லோகம்.

நம் மனம் ஒரு கருத்தை அறிகிறது. நாம் அதை விளக்குகிறோம். என்ன செய்கிறோம்என்று அறியாமல் ஒருவர் கேட்டுக் கொள்கிறார். அடுத்தவர் அறிந்து கேட்டுக்கொள்கிறார்.

❀ நம் மனம் கருத்தை முழுமையாக அறிவது சச்சிதானந்த முழுமை. அது வெளிப்படாது. அது சொல்லாக வெளிப்படும்பொழுது, விஷயம் அறியாமல் சொற்களைக் கேட்பவர் நாம் சொன்னவற்றையெல்லாம் அறிவார். எதைப் பற்றிப் பேசினோம்என அறியார் - இது மனம் அறியும் உலகம் போன்றது. நாம் சொல்வதை அறிந்து அதைச் சொற்களில் காண்பவர் சத்தியஜீவியம் போன்றவர்.

**13) Real-Idea முழு எண்ணம் சிருஷ்டிக்கும் முறை:**

❀ ஒன்றான பிரம்மத்தினின்று சத், சித், ஆனந்தம் என்ற மூன்றை சத்தியஜீவியம் சிருஷ்டித்தது.

❀ ஒன்றை 3ஆக வேறுபடுத்திக் காட்டும் திறன் சத்தியஜீவியத்திற்கு உண்டு. 3ஆகப் பிரிப்பதில்லை. சத்தியஜீவியம் மூன்றிலிருந்து ஒன்றுக்கு வருவதில்லை. அது மனம் செய்வது. ஒன்றில் ஆரம்பித்து அதனுள் மூன்றைக் காண்பது சத்தியஜீவியம்.

இராதாகிருஷ்ணன் என்று பெயரிட்டால் ராதாஎன அழைப்பார்கள். அது வீட்டுப் பெயர். கண்ணா எனவும் வழங்கும். அவருடைய நண்பர்

ஒருவர் அவரைத் தேடி வந்து இராதாகிருஷ்ணனைப் பார்க்க வேண்டும் என்றால் வீட்டுப் பழக்கத்தை மட்டும் அறிந்தவர் 'அப்படி ஒருவர் இங்கில்லை' என்றார். பின்னாலிருந்து மற்றொருவர் 'அவர் ராதாவைத் தேடுகிறார்' என்றார். 'ஓஹோ, எனக்குப் புரியவில்லை, அப்படியா?' என்றார்.

ஆபீசில் வேலை செய்பவர் அவரை இன்ஜினியர் என அறிவர். வீட்டில் அவரை ராதா என்பர். கிளப்பில் அவரை டென்னீஸ் எக்ஸ்பர்ட் என்பர். மூவரும் ஒருவரே. மூன்று நபர்களில்லை. அவர் ஒருவரே என்பதை மறந்து இன்ஜினியர் ஒருவர், ராதா என்பது வேறொருவர், டென்னீஸ் எக்ஸ்பர்ட் மூன்றாம் நபர், ஆக 3 பேர்என மனம் அறியும். அதில் உண்மையில்லை.

சத்தே சித், சித்தே ஆனந்தம், ஆனந்தமே சத் என்பது சச்சிதானந்த உண்மை. ரிஷிகள் மனம் அவற்றை மூன்றாகப் பிரித்து மூன்று வேறு அம்சங்களாகக் கண்டது. இது உண்மையில்லை. மனம் செயல்படும் வகை.

சத்துள் சித்தும் ஆனந்தமும் உண்டு. அதே மற்ற இரண்டினுள் மூன்றும் உறைவது ஆத்மீக உண்மை.

அபிவிருத்தி, பரிணாமம், வெளிப்படுத்துதல் என்ற மூன்று அம்சங்கள் சிருஷ்டியில் உண்டு.

சூழ்வது, சிருஷ்டி, மறைபொருளாக்குவது என்பவை பரிணாமத்திற்கு உரியவை.

- ✰ ஒரு மனித மனத்திலிருந்து அவன் குடும்பம் உற்பத்தியாகிறது. ஒரு முதலாளி மனத்தினின்று கம்பனி உற்பத்தியாயிற்று. ஆண்டவன் மனத்திலிருந்து பூமியும், உலகமும், பிரபஞ்சமும் உற்பத்தி ஆயின.
- ✰ பெற்றோர் குழந்தையைப் பெறுகின்றனர். குழந்தை வளர்கிறது. சிறிய உடலிலிருந்து பெரிய உடல் வருகிறது. மழலை மொழி தெளிவான பேச்சாகிறது. ஒன்றும் தெரியாத சிறுவன் எல்லாம் அறிந்த பெரியவனாகிறான். குழந்தையுள் இவை மறைத்து வைக்கப்பட்டு குழந்தை வளரும்பொழுது அபிவிருத்தியாகி, வெளிப்பட்டு, பரிணமிக்கிறது. இவற்றை செய்வது சத்திய ஜீவியத்தின் Real-Idea. முழு எண்ணம்.



14) புருஷன், பிரகிருதியை சக்தியாலும், ரூபத்தாலும் சிருஷ்டிக்க, தன் எண்ணத்தைக் கருவியாகப் பயன்படுத்துகிறான்.

- ❀ சத்தியஜீவியத்துள் இரு பகுதிகள் உண்டு. ஒன்று காலத்தைக் கடந்தது. அடுத்தது காலத்தில் செயல்படுவது.
- ❀ ஒரு முதலாளி கம்பெனி ஆரம்பிக்க, பல எண்ணங்கள், திட்டங்கள், உதவிக்கு வேண்டிய மனிதர்கள், பயன்படுத்தவேண்டிய டெக்னாலஜி, பெற வேண்டிய லைசென்ஸ் ஆகியவற்றை தம் மனத்துள் பெற்றிருக்கிறார். அவை திரண்டுள்ளன. வெளியில் தெரியாது. முதற் பகுதி இது போன்றது.

  அவர் நிலம் வாங்குகிறார், கட்டிடம் கட்டுகிறார், மெஷின் வாங்குகிறார், ஆள் எடுக்கிறார். இதுபோன்ற செயல்கள் வெளியில் தெரியும். எல்லாம் அவர் எண்ணங்களே. மனத்துள் உள்ளபொழுது தெரிவது இல்லை. செயல்படும்பொழுது தெரிகிறது.
- ❀ ஆண்டவன் இயற்கையை சிருஷ்டிக்க, தம் சக்தியை வெளிப்படுத்தி அவற்றிற்கு ரூபம் அளித்து தம் எண்ணத்தால் தம்முள் செயல்படுத்துகிறார்.

15) மனமும் எண்ணமும் உலகை விட்டு நம்மைப் பிரிக்கின்றன.

நம் வீட்டில் திருமணம் நடத்துகிறோம். அநேகர் குழுமி வைபவம் நடக்கிறது. மணம், இசை, விருந்து, உபச்சாரம், மேளம்என ஆயிரம் காரியங்கள் நடக்கின்றன. இது நம் வீட்டுத் திருமணம். நாமே திருமணம். போட்டோ எடுக்கிறோம். பல போட்டோ ஆல்பம் செய்கிறோம். போட்டோ வந்த புதிதில் போட்டோ முக்கியமாகிவிடும். போட்டோஎன்பது ஒரு நிகழ்ச்சி (still photo). அதில் அசைவில்லை. நாம் முதலில் காமிரா வாங்கி

**போட்டோ எடுத்து ஆல்பம் தயாரித்து அனைவரிடமும் காண்பித்து மகிழ்ந்தால், அதைப் பலமுறை செய்தால், நண்பர், 'உங்களுக்கு திருமணம் மறந்துவிட்டது. போட்டோ முக்கியமாகிவிட்டது' என்பார்.**

**போட்டோ திருமணத்தில் ஒரு சிறு பகுதி. ஆல்பம் முழுவதும் பகுதியே. அதில் ஜீவனில்லை. நம் மனம் ஆர்வத்தால் போட்டோவுக்கு ஜீவன் அளிக்கிறது. இது மனத்தின் செயலுக்கு ஒப்பாகும்.**

**வீடியோ எடுத்தால், அதில் அசைவுண்டு. போட்டோவைவிட அது ஜீவன் உள்ளது. என்றாலும் அதுவும் பகுதியே. இது சத்தியஜீவியம் போன்றது.**

**திருமணம் என்பது பெரியது, அதனுள் நடந்தவை ஆயிரம். அதன் முக்கிய அம்சங்கள், கருத்துகள் போட்டோவிலோ, வீடியோவிலோ அகப்படா. இதை சச்சிதானந்தத்திற்கு ஒப்பிடலாம்.**

**போட்டோ திருமணத்திலிருந்து ஒரு நிகழ்ச்சியைப் பிரிப்பதைப்போல் எண்ணம் முழுமையினின்று ஒன்றைப் பிரித்தெடுக்கிறது. அதன் வழி சென்றால் எண்ணத்தை முழுமையினின்று பிரிப்பதுபோல் நம்மையே நிகழ்ச்சியிலிருந்து மனம் பிரிக்க வல்லது.**

**16) சத்தியஜீவியத்தில் எண்ணம் அதுபோல் உலகை விட்டுப் பிரிவதில்லை. வீடியோவில் அசைவும், ஒலியும் இருப்பதால் போட்டோ நிகழ்ச்சியினின்று விலகுவதுபோல் வீடியோ விலகுவதில்லை.**

**17) நெருப்பும் ஒளியும் பிரிய முடியாதவைபோல் நாம் சச்சிதானந்தத்திலிருந்து பிரிய முடியாது.**

**18) நமக்கு ஆயிரம் எண்ணம், பொறுப்பு, திறமையுண்டு. ஒரு காரியம் செய்யும் பொழுது, ஒருவரிடம் பேசும்பொழுது, நாம் பேச்சில் மட்டும் ஈடுபடுகிறோம். மற்றவற்றை மறப்பதில்லை; பின்னாலிருக்கின்றன. சத்தியஜீவியம் ஒரு குழந்தையை உலகில் சிருஷ்டிக்கும்பொழுது, உலகம் குழந்தையை மட்டும் காண்கிறது. பிரபஞ்சம் முழுவதும் அதன்பின் சத்தியஜீவியத்தால் திரை மறைவிலிருப்பதைப்போல் மறைந்துள்ளது. எனவே குழந்தை உண்மையில் முழு உலகமாகும்.**



**19) இவற்றையெல்லாம் குறிப்பாக உணர்ந்த ரிஷிகள் இறைவனை எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்தவன், எதுவும் செய்யக்கூடியவன் என்றனர்.**

மேற்சொன்னவை தத்துவ விளக்கம். ஓரளவு புரியலாம். முழுவதும் புரிய வாழ்வில் இக்கருத்துகள் செயல்படுவதைக் கண்டால், புரியும். நாம் எலக்ஷனில் நிற்பதுமுதல், கடிதம் எழுதுவதுவரை பல்வேறு காரியங்கள் செய்கிறோம். எந்தச் செயலிலும் மனத்திற்குரிய சிறிய பகுதிகளும், சத்தியஜீவியத்திற்குரிய பெரிய அம்சங்களும் உண்டு. மனத்தால் செயல்பட்டால், செய்யும் வேலை பலிக்கும். சத்தியஜீவியத்தால் செயல்பட்டால், வேலை பலிப்பதுடன், நம்மை வேலை அதன் உயர்ந்த கட்டங்கட்கு எடுத்துப்போகும்.

- ✡ *பலன் மனநிலைக்கு வரும், வேலைக்கன்று.*
- ✡ *வேலைக்கு, வேலைக்குரிய பலன் வரும் - ஊதியம் கிடைக்கும்.*
- ✡ *மனநிலைக்கு ஊதியத்துடன், இலாபம் வரும்.*
- ✡ *வேலைக்குச் சம்பளம், இன்க்ரிமெண்ட் வரும்.*
- ✡ *மனநிலைக்கு பிரமோஷன், புதிய பெரிய வேலை வரும்.*
- ✡ *வேலைக்குரியது திறமை.*
- ✡ *மனநிலைக்குரியது பதம், பக்குவம், இதம், இங்கிதம், அடக்கம், பொறுமை.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

செய்தி உலவுவது உணர்வை மனம் பயன்படுத்துவதை உயிரோட்-டம் உள்ளதாக்குகிறது. சமூகத்தில் அதன் பலன் பெரியது. குடும்பத்தை ஜீவனுள்ளதாக்க ஒவ்வொருவரும் பிரியமாகத் தம் விஷயங்களை அனைவருக்கும் சொல்கிறோம்.

***கலந்த உணர்வு நிறைந்த குடும்பம்.***

## நிலையான நிதர்சனம்

கர்மயோகி

அன்னையை சூட்சும உலகில் காண்பது தரிசனம். அத்தரிசனம் இறைவனின் அருள். ஆனால் அது க்ஷணத்தில் மறையும். அதன் பிறகு இந்த ஜன்மத்தில் அது கிடைப்பது அரிது. நிலையாக அத்தரிசனம் கிடைக்கப்பெறுவது அன்னை நிதர்சனமாவதாகும்.

மனம், உயிர், உடல் கரணங்களாகும். ஆன்மாவும் அவற்றைப் போன்ற ஒரு கரணம் என்றாலும் ஆன்மா உயர்ந்தது; கரணங்கள் பகுதி. கரணங்கள் சேர்ந்த முழுமை ஜீவன். கரணங்கள் பெற்ற தரிசனம் நிலைக்காது. ஜீவன் பெற்றது நிலையானது.

*அதைப் பெறும் வழியொன்று உண்டா?*

*வழிகள் பல. வழிகள் உள. பெறும் அம்சம் பெரியது.*

*வழியில்லாமலில்லை. மனமில்லாமலிருப்பதுண்டு.*

பொதுவாக நம்மைப் போன்றவர்கட்கு மன வளர்ச்சியிருப்பதில்லை. அறிவு அனைவருக்கும் உண்டு. புத்தி அறிவைவிடப் பெரியது. அறிவு விபரங்களையறிவது, புத்தி விபரங்கட்குப் பின்னுள்ள விஷயத்தையறிவது. இவையிரண்டும் பெரியவை. இவை மனமாகா. இவை மனத்தின் பகுதிகள். அறிவும், புத்தியும் அளவுகடந்து வளர்ந்து, செறிந்து, முதிர்ந்த பின் எழுவது மனம். மனத்தைப் பெற்றவரை சிந்தனையாளன் என்பர். அது மேல்நாடுகளிலும் அதிகமில்லை. நம் நாட்டில் ஆன்மீக வளர்ச்சி, சாஸ்திர வல்லுனர் போன்றவரே பெற்றுள்ளனர். பொதுவாக நம் போன்றவர் பெற்றது அறிவு அல்லது புத்தி. சமூகத்தில் இவையுள்ளவரை அனைவரும் அறிவர். பார்த்தால் அறிவாளி, புத்திசாலி எனத் தெரியும். அவர்கள் சிறுபான்மையோர். பெரும்பான்மையோர் உணர்ச்சிவசப்பட்டவர்.



உணர்ந்து காரியங்களைச் செய்பவர். இவர்கள் சிந்திக்கமாட்டார்கள். எடுத்தவுடன் உணர்ச்சிவசப்படுவர். அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்ட உடன் இப்படிப்பட்டவர் கண் கலங்கும், நெஞ்சு நிறையும், உடல் புல்லரிக்கும், நெஞ்சு நெகிழும். அப்படிப்பட்டவர் தரிசனம் பெறுவர். அவர்கள் சூட்சுமமானவர். அடிக்கடி கனவில் அன்னை வருவார், படம் உயிருடனிருக்கும், அழைத்தால் அன்னை வருவார், பிரார்த்தனை பலிக்கும், பிரார்த்திக்காமலேயே வேண்டியது நடக்கும். இவர்கள் ஆழ்ந்த பக்தர்கள். அவசியமானது ஒன்றுண்டானால், இப்படிப்பட்டவர் பிரார்த்தனை ஒரு முறையும் தவறாது. இவை முதலில் 6 மாதம், ஒரு வருஷம் சிறப்பாக இருக்கும்; பிறகு அழியாது. அது கொடுத்த நம்பிக்கை அழியாது. ஆனால் ஆரம்பத்திலிருந்த நெகிழ்வு, தீவிரம், தரிசனம் குறையும். சிறப்புக் குறையும், நம்பிக்கை அழியாது. மனம் பழைய நெகிழ்ச்சியை நினைத்து ஏங்கும். இது தரிசனமானாலும் நிலையற்றது.

அறிவாளிக்கும், புத்திசாலிக்கும் நெகிழ்ச்சி அதிகமாக இருக்காது. அவனுக்கு யோசனை பிறக்கும். அன்னையை அறிந்தபின் மனம் தெளிவாக அன்னையை ஏற்கும். அது நிலையானது. எனினும் நெகிழ்ச்சி, தரிசனம் அவர்கட்கில்லை. மனம் ஏற்றதால் அது லேசில் மாறாது. நம்பிக்கை நீடிக்கும். உணர்ச்சிவசப்பட்ட உத்தமர் பெற்ற நிறைவோ, நெகிழ்ச்சியோ, தரிசனமோ இவர்கட்கில்லை. ஏதோ ஒரு சமயம் கிடைக்கும். இவர்கள் பெற்ற அறிவு உயர்வுடையதானாலும், நெஞ்சு நிறையும் நிதர்சனம் இவர் அறியாதது.

### ஆத்ம விழிப்பு:

மனம் விழிப்பது - அன்னையை அறிவது - தெளிவானது, நிலையானது. ஆனால் உணர்ச்சிமயமான சிறப்பும் நிறைவும் உடையது அன்று. உணர்ச்சி விழிப்பது உடனே பலிப்பது; நிறைவானது; சிறப்பானது; நெகிழ்வானது. ஆனால் அதன் உயர்வு நாளடைவில் மங்கும். ஆத்ம விழிப்பு அதிஉயர்வானது. நிஷ்டையில்மட்டும் கிட்டுவது. நிஷ்டைக்கு அது நிலையானது; விழிப்பில் நாம் அறிய முடியாதது. அன்னை வாழ்வில்

நிதர்சனமான தெய்வம். நிஷ்டையில்மட்டும் பெறும் விழிப்பு அன்னையை அடையப் போதாது. வாழ்வில், அதாவது விழிப்பில் பெறும் ஆத்ம விழிப்பே அன்னையை அடைய உதவும். பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஆத்மாவுக்கு இரண்டு அம்சங்களுண்டு என்கிறார். நிஷ்டையில் காணும் ஆத்மா சாட்சி புருஷன், செயலற்றது. வாழ்வில் காணும் ஆத்மா வளரும் ஆத்மா என்கிறார்.

- ❀ **செயலில் வெளிப்படும் ஆத்மா நிலையான நிதர்சனமாகும்.**
- ❀ **அது பகவான் அலிப்பூரில் பெற்ற நாராயண தரிசனமாகும்.**
- ❀ **ஒரு முறை அதைப் பெற்றால், அது நம்மை விட்டகலாது. நினைத்து அழைத்தால் அது நிலையாகப் பின்னணியிலிருப்பது தெரியும். அழைப்பை ஏற்று வெளிவரும்.**

இக்கட்டுரை அதைப் பெறும் வழிகளைக் கூற முயல்கிறது. அது அறிவாளிக்கும், உணர்ச்சிவசப்பட்டவனுக்கும் உண்டு. அதையும் கடந்து உடலால் மட்டும் வாழும் உழைப்பாளிக்கும் உண்டு.

- ❀ **எவருக்கும் எதுவுமில்லை இல்லையெனக் கூறாத யோகம் இது என்பதால் வழிகள் பல உள.**
- ❀ **தன்மைக்கேற்றவாறு வழி மாறும்.**
- ❀ **நம் நிலைக்குரிய வழியை ஏற்கும் மனம் உடையவருக்கு ஒன்று பத்தாகும், நூறாகும் நிலையுண்டு.**

முதலில் பெரும்பான்மையான உணர்ச்சிவசப்பட்டவரைக் காண்போம். இவர்கள் அன்னையைக் கேட்டறிந்தமாத்திரம் அழைப்பின்றி அன்னை இவர் வாழ்வில் செயல்படுவதால் இவர்கட்கு,

**கேள்வி என்பதே எழுவதில்லை.**

இது ஆனந்தமான அகநிலை என்பதால், இம்மனநிலையில் இவர்களால் எந்தத் தத்துவத்தையும் பொறுமையாகக் கேட்டுக்கொள்ள



முடியாது. 'எனக்கென்ன குறை, எது இல்லை எனக்கு, ஏன் இந்த தத்துவமெல்லாம்' என மனம் கருதும். கொஞ்ச நாள் கழித்து ஆரம்ப உற்சாகம் வாடி வடிந்த பின்னரே இவர்களால் காது கொடுத்து வழிகளையும், முறைகளையும், தத்துவங்களையும் கேட்டுக்கொள்ள முடியும். அந்நிலையில் நான் கூறுவது விளங்கும். இவர்கட்குரிய முறை கீதையில் விளக்கமாக உள்ளது. பலன் கருதாமல் வேலை செய்வது - நிஷ்காம்ய கர்மம் - சர்வதர்மத்தையும் சரணம் செய்வது. அதைச் செய்தவர் மோட்சம் பெறுவார். நாம் தேடுவது மோட்சமன்று; பூலோகச் சுவர்க்கம். அதனால் நாம் கையாளும் முறை கீதையினுடைய முறையானாலும், சற்று மாறுபட்டிருக்கும். கீதையின் முறை பிரம்மத்தை நாம் அடைய வேண்டும். நமக்கு பிரம்மம் நம் செயலிலும், வாழ்விலும் மலர வேண்டும். நாம் பிரம்மத்தை அடைவது மோட்சம். அது நமக்கு கவர்னர் விருந்திற்கு அழைக்கும் அழைப்புப் போன்றது. பிரம்மம் நம் வாழ்வில் மலர்வது கவர்னர் நம் வீட்டிற்கு வருவது போன்றது. நம் செயலில் பிரம்மம் மலர்வது கவர்னர் நம் வீட்டில் நமக்குச் சமையல் செய்து சாப்பாடு போடுவது போன்றது. இதைச் சாதிக்கும் முறைகளை பகவான் சமர்ப்பணம், சரணாகதி எனக் கூறுகிறார். அவை யோகத்திற்குரியவை; கடினமானவை. அவற்றை எளிமையாக்க முடியாது. நம் வாழ்வையொட்டி வேறு வகைகளில் கூறலாம்:

- ❀ **மோட்சம் பெறுவதைவிட அகந்தையைக் களைவது கடினம்.**
- ❀ **தெய்வங்கள் பெற்ற ஞானத்துடன், அஞ்ஞானமும் கலந்திருக்கும்.**
- ❀ **முற்றும் துறந்த முனிவரையும், நேரம் வந்தால் காமக் குரோத லோப மோகங்கள் பாதிக்கும்.**
- ❀ **அவதாரப் புருஷனும் கர்மத்திலிருந்து தப்ப முடியாது.**
- ❀ **கிருஷ்ண பரமாத்மாவும் போரில் வெற்றி பெற பொய்யைக் கையாள வேண்டியிருந்தது.**
- ❀ **தெய்வமான நாரதர் கலகப் பிரியர்.**
- ❀ **வயோதிகமான கௌதமரும் அகல்யையை மணக்க நேரிட்டது.**

❀ **மோட்சம் பெறுவதைவிட மெய்யைக் கடைப்பிடிப்பது கடினம்.**

மெய், சத்தியம் என்பது ஆன்மாஎன்ற அகத்தின் புறம். மெய்யைக் கடைப்பிடித்தால் சத்தியத்தின் நிலை ஆன்மாவின் புறமாகும். புறத்தினின்று அகத்தை அடைந்தால் ஆன்மாவையடையலாம். அதுவும் மோட்சமாகும். திருவுருமாற்றமாகாது. வளரும் ஆன்மா நம் வாழ்வில், செயலில் செயல்படுவதே திருவுருமாற்றமாகும். சர்வதர்மத்தையும் தியாகம் செய்து பெறும் மோட்சப் பாதையினின்று திருவுருமாற்றத்தை எப்படியடைவது? வாழ்வில் எப்படி ஆன்மாவை மலரச் செய்வது? செய்ததை எப்படி அறிவது?

வாழ்வில் வளரும் ஆன்மா மலர்ந்தால் உலகம் நம் பார்வையில் மாறும். அவ்வாழ்வில்,

❀ **எதிரி நண்பனாகத் தோன்றுவான்.**

❀ **பாவமும், புண்ணியமும் ஒன்றாகத் தோன்றும்.**

❀ **அனைத்தும் இறைவன் செயல்என நாமறிவோம்.**

கீதை கூறும் நிஷ்காம்ய கர்மம் விரதம். நிஷ்காம்ய கர்மம் பூர்த்தி-யானாலும் அதனடியில் ஓரளவு பொய்யிருக்க முடியும். அதனால்,

**நம் மனத்திலுள்ள பொய்யை நாம் அறிந்து**
**களைய முயலும் பாதை இதற்கு உதவும்.**

உதாரணமாக வீண் வம்பு பேசுபவர் ஒருவர் வருகிறார். அவரிட-மிருந்து தப்பிக்க ‘எனக்கு வேலையிருக்கிறது’ எனக் கூறுகிறோம். அது பொய். ஆனால் அது விடுதலை தருகிறது. அவரிடம் எப்படி மெய் சொல்வது? நீங்கள் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லைஎன எப்படிக் கூறுவது? அதைக் கூறாமல், ‘எனக்குப் பொய் சொல்ல முடியாது’ என்று முடிவு செய்தவுடன், அது சத்தியத்தை அழைப்பதாகும். சத்தியம் மேலே எழுந்து வரும். அது சூழலைக் கனக்கச் செய்யும். கனத்த சூழல், நிலைமையை மாற்றும். அவரை அவர் வீட்டார் தேடி வருவர். தானே



அவர் போய்விடுவார். நமக்குப் பொய் சொல்லும் சந்தர்ப்பம் போய்விடும். இது அரிச்சந்திரனாவது. நமது அன்றாட நிகழ்ச்சிகளில் இதைப் பொருத்தி 50 வகைகளாகக் கூறினால் புரியும். புரிவதால் எளிதில் செய்ய முடியாது. செய்தால் நிலையான தரிசனம் நிதர்சனமாகும்.

மனவளர்ச்சியுள்ளவர் எப்படி இதைச் சாதிக்கலாம் என முதலில் காண்பது உதவும்.

❀ **மனம் அளவுள்ளது. அதனால் அளவைக் கடக்க வேண்டும்.**
**மனம் ஒரு புறம் மட்டும் காணும்.... இருபுறமும் காண முயல வேண்டும்.**
**மனம் ஓடும். எனவே ஓட்டத்தை நிறுத்தி அமைதியை நாட வேண்டும்.**
**மனம் சிந்தனை செய்யும். சிந்தனை நின்று மௌனம் எழ வேண்டும்.**
**மனம் நினைவுள்ளது. நினைவழியும் அளவு பரவசமடைய வேண்டும்.**

அளவைக் கடந்து, இருபுறமும் காண முயன்று, ஓடும் எண்ணம் நின்று அமைதியுற்று, சிந்தனை மௌனமாக மாறினால் நினைவு நம்மை விட்டகன்று பரமனையடைந்து பரவசமாகி மெய் மறப்பது சமர்ப்பணத்-திற்கு உறுதுணையான முதற்படி.

❀ **மேல்மனத்தில் மனத்துடன் காலமும், அகந்தையும், சிறியதும் உண்டு.**
**மனத்தை வென்றதைப்போல் அவற்றையும் தாண்டி வருதல் அவசியம்.**
**காலம் நிகழ்ச்சிகள்மூலம் அடுக்கடுக்காய் நகரும்.**
**கடந்ததை நினைவுபடுத்தினால் நாம் காலத்திற்கு அதிகமாகக் கட்டுப்படுவோம்.**
**எதிர்காலத்தை எதிர்நோக்கினால் அது எதிர்பார்ப்பாகும்.**
**எதிர்பார்த்தால் நம்பிக்கை அழியும்.**
**கடந்ததைக் கருதாமல், வருவதை நினைக்காமல், எதிர்பார்ப்புக்கு இடம் தாராமல், உள்ளதை உன்னிப்பாகக் கருதினால் - நிகழ் காலத்தில் தன்னையிழந்தால் - செய்வது சிறப்படைந்து கருமத்தில்**

கருத்து ஊன்றி பல மணி நேரம், சில நிமிஷங்களாக ஓடி மறையும்.

இது ஓரளவு காலத்தை வெல்ல உதவும்.

❀ அகந்தையை நாம் அறிவோம். அது சுயநலமானது.

சுயநலம் தன்னை நினைக்கும், தன்னை மட்டும் நினைக்கும் - அகந்தையழிய பிறரை நினைக்க வேண்டும், பிறரை மட்டும் நினைக்க வேண்டும், தன்னை நினைக்கக் கூடாது.

தன் எண்ணம் மட்டுமே சரி என்பதை மாற்றி பிறர் கோணத்தில் விஷயங்களைக் கருத வேண்டும்.

மனிதனுக்கு தன் உணர்ச்சி தெரியும்; பிறர் உணர்வதை அறியும் நிலை அவனுக்கில்லை. உணர முடியாவிட்டால் நினைக்க முடியும். பிறர் நிலையில் தன்னை வைத்து நினைத்துப் பார்ப்பது சுயநலத்தைக் களைய உதவும்.

சுயநலம் குறுகிய மனத்தால் செயல்படும் - மனம் பரந்து விரிய வேண்டும்.

சுயநலம் பிறரழிய விழையும் - பிறர் வாழ விழையும் மனம் நல்லது.

கெட்ட எண்ணம் சுயநலத்துடையது - நல்லெண்ணத்தைப் போற்ற வேண்டும்.

ஆசை, அதிகாரம் சுயநலம் - பணிவும், பற்றறுத்தலும் பாராட்டுதலுக்கு உரியன.

சந்தேகம் சுயநலம் - நம்பிக்கை அதற்கெதிரானது.

சோம்பேறித்தனம் சுயநலமானது - சுறுசுறுப்பு அதை அழிக்கும்.

தமஸ் உடலின் சுயநலம் - தீவிரச் செயல் நல்லது.

அபிப்பிராயம் நம்முடையது - கருத்து பொதுவானது.

மனம் சிந்திக்கும் பழக்கமுடையது - அப்பாதையினின்று விலகினால் சிந்தனை வேகம் குறைந்து மௌனத்தின் சாயல்பட்டு அறிவு தீட்சண்யம் பெறும்.



மனம் ஏற்பது மகிமையற்றது - ஏற்பதை விலக்கி ஏற்க வேண்டியதை நாட வேண்டும்.

பொறாமை மனிதனுடன் பிறந்தது - அது அழிய வேண்டும்.

அவசரம் அழிந்து பொறுமை பிறப்பது சுயநலமழிவதாகும்.

❀ கடைசியான அம்சம் சிறியது (finite).

'நான் சிறு குடும்பம் செய்ய முயல்கிறேன்'.

'நமக்கு இதற்கு மேலில்லை'.

'பெரியதற்கு ஆசைப்படுவது பேராசை'.

'இருப்பதை விட்டு, பறப்பதை நாடாதே'.

'உடையது விளம்பேல்'.

'நடப்பதைக் கவனி, நாட்டில் நடப்பனவெல்லாம் நமக்கில்லை'.

'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு'.

'நாமிருப்பது தமிழ்நாடு, அமெரிக்காயில்லை'.

'ஆசைக்கும் ஓர் அளவில்லையா?'

என்பது போன்ற ஏராளமான சரியான நல்ல கருத்துகள் நம் வாழ்வை இதுவரை நடத்திவருகின்றன. இனியும் அவற்றைக் கருதலாம். கருதாமலிருக்கலாம்.

மாடு மேய்த்தவன், தன் மகன் படிக்க ஆசைப்படுகிறான்.

ஒரு வேளைக்கு மேல் சாப்பிட நினைப்பது தவறு என்றவன் 3 வேளை சாப்பிடுகிறான்.

சினிமா பார்ப்பது சில்லறை மனப்பான்மையென எவரும் நினைப்பது இல்லை.

தினமும் 10 மைல் வேலைக்காக நடந்தவன், ½ மைல் போக பஸ்ஸுக்-காகக் காத்திருக்கிறான்.

*உலகம் மாறிவருகிறது. மாற விரும்புவோர்க்கு வழியுண்டு.*

நாடும் மாற்றத்தை சுயநலமாக நாடலாம்; இலட்சியமாகவும் நாடலாம்.

**அதுவே நம் கொள்கை.**

மனத்தைக் கடந்து, காலத்தை வென்று, அகந்தையினின்று அகன்று, சிறியது பெரியதாக விழைவது சமர்ப்பணம். சமர்ப்பணம் மேல்மனத்தி-னின்று உள்மனத்திற்குக் கொண்டு போகும். உள்மனத்தில் சைத்திய வாயிலுண்டு. அதன் வழி அடிமனத்தை சைத்தியத்தை அடைவது ***நிதர்சனமாகத் தரிசனத்தை நிலையாகப் பெறுவதாகும்***. இது மனம் வளர்ந்தவர்க்குரிய பாதை.

உணர்ச்சிமயமானவர்க்குரியதென்ன?

❀ **உணர்ச்சிக்கு அறிவில்லை.**

**அறிவுக்கு ஆத்மா இல்லை.**

**ஆத்மா அசைவற்றது.**

**நாம் தேடுவது வளரும் ஆன்மா.**

**வளரும் ஆன்மாவை அடைவது தவத்தைக் கடந்த நிலை.**

**அது பெரிய வரப்பிரசாதம். என்றாலும் அது நம் இலட்சியமில்லை.**

**உணர்ச்சியில் வளரும் ஆன்மாவை நாம் நாடுகிறோம்.**

**உணர்ச்சியை எட்டிச் சமர்ப்பணம் செய்வது அறிவின் கருத்தைச் சமர்ப்பணம் செய்வதைவிடச் சிரமம்.**

**இரண்டையும் ஒன்றில் அடுத்ததைப் பெறுவது நம் குறிக்கோள். அது யோகத்திற்குரியது.**

**அவ்வளவு பெரிய கட்டுப்பாட்டை நாம் நாட முடியுமா?**

**அன்னையை அவ்வாழத்தில் ஏற்க முடியும்.**

**அது முடிந்தால், நம்மால் முடியாதது அன்னையால் முடியும்.**

**அது நம் எண்ணத்தை நிறைவேற்றும்.**

‘எனக்கு அறிவுமில்லை, உணர்ச்சியுமில்லை, வேலை மட்டும் செய்வேன். என்னைப் போன்றவர்க்கு எதுவுமில்லையா?’ என்பவர்



உடலால் உழைப்பவர்.

**எவரும் இந்த அருளுக்கு விலக்கில்லை என்பதால்**
**அவருக்கும் உரிய முறையுண்டு.**

❀ **உடலால் உழைப்பவன் உழைப்பாளி.**

**உழைப்புக்குரியது வேலை.**

**சிறப்பு perfection என்பது யோகத்திற்குரிய இலட்சியம்.**

***எந்த நிலையில் சிறப்பெய்தினாலும் அது இலட்சியத்தில் முடியும்.***

**செய்வன திருந்தச் செய் என்பது வழக்கு.**

**கதவில் தாழிட்டால், தாழ் பாதி விழுந்தாலும் கதவு மூடிக்கொள்ளும்.**

**தாழ் கடைசிவரை விழுந்தால் சிறப்பு.**

**அதை சப்தமில்லாமல் போடுவது சிறப்பின் அடுத்த அம்சம்.**

**எரிச்சலில்லாமல் அவ்வேலையைச் செய்வது பொறுமை.**

**பொறுமையால் செய்யப்பட்ட வேலை பொறுப்பான வேலை.**

**பொறுமையும், பொறுப்பும் சிறப்பிற்குரிய அகத்தின் அம்சங்கள்.**

**பாட்டிலைத் திறந்து எண்ணெயை எடுத்தால் பாதி நேரம் மூடுவதில்லை.**

**உடனே மூடுவது அவசியம்.**

**முழுவதும் மூடுவது மூடுவதாகும்.**

**வேலை முடிந்து வெளியே போகும்பொழுது பாட்டில் மீது எண்ணெய் இருப்பதை, சோப்புப் போட்டுக் கழுவ நமக்குத் தோன்றுவதே இல்லை.**

**அது பாட்டிலைப் பயன்படுத்துவதைச் சிறப்பாகச் செய்வதாக அர்த்தம்.**

**சிறப்பாகச் செய்த வேலை சமர்ப்பணமாகச் செய்த வேலையாகும்.**

❀ **'நான் உழைப்பாளி, எனக்கு அறிவோ, உணர்வோயில்லை' எனக் குறைப்படுவதற்குப் பதிலாக,**

**உழைப்புக்குரிய முறைகள் என்னஎன அறிந்து அவற்றைச் சிறப்பாகச் செய்வது மனம் வளர்ந்தவரும், உணர்ச்சி நிறைந்தவரும் பெறும்**

ஆன்மீகப் பலனைப் பெற உதவும்.

☆ கடைக்குப் போக விரும்பினால் நேரம் குறித்து, குறித்த நேரம் தவறாமல் போவது,

பாத்திரத்தை வைக்கும்பொழுது சத்தமில்லாமல் வைப்பது,

அறுந்துபோன பொத்தானை அதே நிமிஷம் தைப்பது,

பிரித்துப் படித்த புத்தகத்தை மூடி வைப்பது,

மேஜை டிராயருள் பொருள்களை அடுக்கிவைப்பது,

சைக்கிள், மோட்டர்பைக் ஆகியவற்றை சுத்தமாகத் துடைத்து வைப்பது,

ஆபீசில் வேலையை அன்றாடம் முடிப்பது,

செலவுக்குக் கணக்கெழுதுவது,

அழுக்குத் துணியையும், மடித்து, திருப்பிப் (inside out) போடுவது,

கதவை, சத்தமின்றி சார்த்துவது,

சுத்தத்துடன், ஒழுங்கையும் ஏற்பது,

போன்ற ஆயிரம் சிறு கடமைகள் செய்வன திருந்தச் செய்வதாகும்.

❀ உழைப்பாளி வேலையைச் சிறப்பாகச் செய்வது வேலை தன் பாஷையில் காட்டும்.

கையலம்புமிடம் சுத்தமானால், தண்ணீர் தட்டுப்பாடிருக்காது.

நோட்டு, புத்தகம் அடுக்கி வைக்கப்பட்டால், வேலையில் பிரமோஷன் வரும்.

நம்மீது பிறர் குறை சொன்னால், நாம் செய்யும் வேலையில் குறை உள்ளதுஎனப் பொருள்.

நாம் கையாளும் பொருள்கள் பெருகுவது வேலை சரி எனப் பொருள்.

வேலை உயர்ந்த முறையில் சரியானால், நாம் கையாளும் பொருள்களின் தரம் உயர்ந்து நம்மை நாடும்.

டி.வி., கலர் டி.வி.யாகும்.



வேலையின் தரம் தானே தன்னைக் காட்டிக்கொண்டபடியிருக்கும். அதற்கு குறைவிருக்காது.

தேடி வருவது தெய்வம் தருவது.
நாடிப் போவது நலம் தருவதில்லை,

என்ற சொற்கள் இதுவரை கூறியவற்றைச் சுருக்கிச் சொல்வதாகும்.

❀ தத்துவம் பேசாமல், நடைமுறையை அறிய ஆவல்.

உயர்ந்தவர்க்கு உரியதை எனக்குரியவாறு கூற வேண்டும்.

ஆண்டவனை அடைவதைவிட வாழ்வை முறையாக நடத்த வேண்டும்.

நடக்காத இலட்சியங்களை விட்டு, நடக்கும் காரியங்களை எப்படிச் செய்வது?

வாயாடி மனைவியை வாழ வைப்பது எப்படி?

குடிகாரக் கணவனை குடும்பம் செய்ய வைக்க முடியுமா?

பாடம் வாராத மகளை, விரும்பிப் பள்ளிக்குப் போக வைக்க வழி உண்டா?

எளியவனுக்கு ஏற்றம் பெறும் வழி ஏதாவதுண்டா?

யாரோ கண்டுபிடித்த டி.வி.யை நான் பார்த்து மகிழ்வதுபோல் மகாத்மாக்கள் செய்த புண்ணியத்தால் என் வாழ்வு மலருமா? மணம் வீசுமா?

எனக் கேட்பவருண்டு.

கேட்க நினைத்து, கேட்காதவருண்டு.

எந்தப் பிரார்த்தனையையும் நிறைவேற்றும் அன்னை பணத்தை மட்டும் அளவோடு தருவது ஏன் எனக் கேட்பவருண்டு.

❀ அவர்கள் அனைவருக்கும், 'அத்தனையும் உங்களுக்கும் உண்டு' என்று கூறும் பதிலின் பல அம்சங்கள் - பொதுவானவை - பொதுவானவற்றை சிறப்பாகச் செய்வது முழுப்பலன் தரும்.

அது யோகத்தில் நிலையான தரிசனத்தை நிதர்சனமாக்கும்.

**வாழ்வில் சிறப்பின் அம்சங்களைச் சிறப்பாக நிரப்பும்.**

**அதற்குரிய ஒரு மந்திரத்தைப் பலவாறு கூறலாம்:**

1. **முடிந்ததை முழுமையாகக் குறையின்றிச் செய்வது.**
2. **பிறர் வாழ மனம் பதைபதைப்பது.**
3. **பிறர் கோணத்தில் எதையும் அறிய முயல்வது.**
4. **இடைவிடாத அன்னை நினைவு இனிப்பது.**
5. **கடமையைக் கடந்து கருத்தை அன்னையால் நிரப்புவது.**
6. **பிறருக்கெல்லாம் அதிர்ஷ்டம் வந்தபின் எனக்கு வரட்டும்எனக் கூறுவது.**
7. **உலகம் அன்னையை அறிய ஆர்வம் கொள்வது.**
8. **பிரச்சினையைப் பொருட்படுத்தாத மனப்பான்மை.**
9. **அடக்கத்தின் உயர்வை ஆன்மாவில் போற்றுவது.**
10. **தேடி வருவதைப் பாராட்டிப் போற்றி ஏற்பது.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு மேதை உலகம் கண்டிராததைச் சாதிக்க வழி கண்டுபிடித்-தால், அதை நம்பமாட்டார்கள். அல்லது தந்திரம் என்பார்கள். இரண்டும் இல்லை. சாதனை மிகக் கடினம். ஆனால் முடியும். உள்மனத்தில் சைத்தியப்புருஷன் உறைவதைக் காணுதல் பூரண யோகப் பாதை. அது போன்ற யுகஇரகஸ்யம் அது.

✡ ***சைத்தியப்புருஷன் யுகஇரகஸ்யம்.***

✡ ***சைத்தியம் யுகதர்மம்.***



## அன்பர் கடிதம்

ஆதியும் அந்தமுமாய், அன்னையெனும் பேரொளியாய்,
கோதிலா அமுதமுமாய், அவதரித்தாய் பூமிதன்னில்!

தீதிலா மனத்தினராய், மாதவிப் புன்னை மலரொடு,
தாதவிழ் நாண் மலர்ச் சின்னம், புனைந்திடுவார்*
நெஞ்சம் போல், நெகிழ்ந்து நானும் தொழுதேத்துகின்றேன்!
சிந்தனையில் நின்னையல்லால், வேறு தெய்வமும் நினைத்தேன் அல்லேன்!

நொடிந்தவன் தன்னை, முடியுமா மீள்வதற்கென,
இடிந்த மனத்தினானை, எழுச்சியுற நிற்கவைத்தாய்!

போயின துன்பங்கள், புரிந்தன புதுவழிகள்,
பேதலித்த மனத்தில் பேதமையையும் நீக்கினாய்!
சாதனையும் சேர்த்திட்டாய், இங்கே என் வேதனையும் போக்கினாய்!

நன்றியை, காணிக்கை ஆக்கினேன் அன்னையே,
நன்று என ஏற்பாயோ! ஆதியே அருளமுதே!

நன்றென்றும் தீதென்றும் இல்லா அன்னை நீ, நன்றியுடன்
என்றென்றும், உன்னைத் தொழுவார்க்கு குறையொன்றும்
இல்லை, உயர்வடைவார் திண்ணம்!
வாயுரைக்க வல்லேன் அல்லேன், வாழ்வு தந்த அன்னையே!

❀❀❀

நந்தா விளக்கின் சுடரனைய, கோணாதகோல் கொம்பன்ன,
சிந்தா நினைவன்ன குவிந்த மனத்தினர், தெளிந்த சிந்தையர்,
கண்டனர் யோகியர்! அடைந்தனர் ஆனந்தம்!
மலர்ந்தது ஆன்மா! பகர்ந்தன பனுவல்கள்!

நன்றே தந்திடுவார் பரிசொன்று! அன்னை! பண்ணார் புன்சிரிப்பை!
அன்றே பொழிந்திடுவார் அருள் மழையை, அற்புதம் என்று அறிவாரோ!

---

* சின்னம் புனைந்திடுவார் - அன்னை, பகவான் சின்னம் தியான மையத்தில் வண்ணமலர்களால் அடுக்கி வைக்கும் அற்புதக்கலை.

தேனார் இனிய அமுத மொழிகள், ஞானார்ந்த அருளுரைகள்,
தானாய் உணர்வால் உந்துதலால், உண்மையாய் ஏற்றவர்க்கு,
தோன்றிடுவார் ஆதி பராசக்தி! வெண்சுடராய் அகத்திலொரு காட்சியதாய்!

சோதியாய் நின்றதொரு சுடர் ஒளியாய், உள்ளொளி
ஓங்கி வளர, உலப்பிலா ஆனந்தமாய், பொங்கி வரும்
இன்ப வெள்ளத்தை, யாரே விண்டுரைக்கவல்லார்!

அகம் மகிழ்ந்து நெகிழ்ந்துருக, அருள் பெருகும் பேரின்பம்
உய்யும் வகையில் அளிப்பார், அன்னை உவந்து!!

❀❀❀

**அன்னை என்பது யார்?**

அன்னை என்பதோர் சக்தி, அற்புதமான சிருஷ்டியின் சக்தி!
இடையறாது இயங்கும் சக்தி, இனிமையான தெய்வ சக்தி!
அற்புதங்கள் நிகழ்த்தும் சக்தி, வாழ்வின் சிக்கலை அவிழ்க்கும் சக்தி!
ஆர்வமும் அழைப்பும் சேர்ந்திட்டால், விரைந்து செயல்படும் அன்னை சக்தி!
மனிதனை நாடி வருவது அன்னை சக்தி!
சோதனை செய்வதில்லை அன்னை சக்தி!
அன்னை சக்தி, சத்தியத்தின் சக்தி, ஆனந்தம் கூட்டும் ஆன்ம சக்தி!
விண்ணுலக தெய்வங்களுக்கு, தாய் ஆவார் அன்னை!
வானவரும் காண்பரிய, வானுலகுக்கும் மேலாய, சத்தியலோக
அவதாரம், அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும் என அறிந்து கொண்டேன்!

❀❀❀

*M. மணிவேல்*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முழு முயற்சியின் தவம் போன்ற கடுமையை முழு அன்பின் எழுச்சியாகிய நிறைவை அளிப்பது அன்னைக்கு நாம் செய்யும் சரணாகதி.

***கடுமையான தவம் இனிமையான நிறைவாகிறது.***





# தரிசனம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல.சுந்தரி

வைத்தியநாதன் நாடு திரும்பியதும் முதல் வேலையாக நேரே புவனேஸ்வரி காலனியில் உள்ள தம் நண்பர் பரமசிவத்தின் வீட்டிற்கு வந்தார். (நண்பன் பரமசிவம் சமீபத்தில் இறந்துவிட்டார். அவர் குடும்பம் எதிர்பாராத இழப்பால் நொடித்துப்போனது. மீனாவுக்கு நெஞ்சுவலி என்று நண்பரின் மனைவி புவனா தன்னிடம் கூறியவுடன், தாம் மணியன் நர்ஸிங் ஹோமில் வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்வதாயும், மீனாவிற்குத் தெரிவிக்காமல் அவளை அங்கு அழைத்துப் போகும்படிக் கூறியிருந்தார். மீனா தன் தந்தையின் மறைவுக்குப்பிறகு, தன் தாய் யாரிடமும் எந்த உதவியும் பெறக்கூடாதுஎன விரும்பினாள். எனவேதான் அவளுக்குத் தெரிய வேண்டாம்என எண்ணினார்).

இப்போது அவளுக்குக் குணமாகி வீடு திரும்பிய செய்தி அறிந்து நேரே அங்குச் சென்றார்.

மீனா தன் தோழிகளுடன் மகிழ்வாகக் காணப்பட்டாள். அவருக்கு நிம்மதியாய் இருந்தது. 'மீனா' என்று வாஞ்சையுடன் அழைத்தவண்ணம் உள்ளே வந்தார் வைத்தியநாதன்.

"வாருங்கள் மாமா. எப்போது வந்தீர்கள்?" என்று வரவேற்றாள். "நேரே ஹாஸ்பிட்டலுக்குப் போனேன். நீ வீட்டிற்கு வந்துவிட்டதாகத் தெரிந்ததும் நேரே இங்குதான் வருகிறேன்" என்றார்.

"ஹாஸ்பிட்டலுக்கா? உடம்பு சரியில்லையா?" என்றாள்.

உடனே எச்சரிக்கையானார். தான் உதவி செய்தது தெரிய

வேண்டாம் என்று கூறியதை மறந்து ஏதேனும் பேசிவிடக்கூடாதே என எண்ணி, “ஆமாம், லேசாக உடல்நலம் சரியில்லை. அதுதான்” என்று மழுப்பினார்.

“கவலைப்படாதீர்கள் மாமா. எனக்குக்கூட நெஞ்சுவலி என்று பயந்து இதயநோய் சிறப்பு நிபுணரைப் பார்த்தோம். இதயம் ‘ஏ’க்ளாஸாக இருக்கிறது, வெறும் வாயுத்தொல்லை என்று மாத்திரை கொடுத்தார். இப்போது நான் ஓ.கே. ஆகிவிட்டேன்” என்று குதூகலித்தாள். சற்று குழப்பமானது. இருந்தாலும் அவள் நலமாக இருக்கிறாள், அது போதும் என்று விடை பெற்றார். நேரே மணியன் மருத்துவமனைக்குச் சென்றார். அங்கு டாக்டர் பிரகாஷ் அப்போதுதான் வந்திருந்தார்.

அவரிடம் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டார்.

டாக்டர், வைத்தியநாதனை அன்புடன் வரவேற்று நன்றி சொன்னார். மீனாவின் வைத்திய விபரங்கள் அடங்கிய ஃபைலை செலவுக் கணக்குகளுடன் அவரிடம் ஒப்படைத்தார். “மீனா மிகவும் நல்லவள். நேற்றுதான் வீட்டிற்கு அனுப்பினோம். நீங்கள் சற்றுமுன் வந்ததாகச் சொன்னார்கள். நான் அவசர கேஸ் ஒன்றிற்காக வெளியே போயிருந்தேன்” என்றார்.

“டாக்டர், எனக்கு மிகவும் குழப்பமாக உள்ளது. நான் மீனாவை வீட்டிற்குப் போய் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். அவளுக்கு, நீங்கள் கூறுவதுபோல் இதயத்தில் எந்தக் கோளாறும் இல்லை என்று இங்குதான் பரிசோதித்து அனுப்பியதாக அவளே சொன்னாள்”.

“அப்படியா? நான் மீனாவிற்குக் குணமானதும் அவள் எனக்கு நன்றி சொன்னாள். அப்போது நன்றிக்குரியவன் நானல்லேன். உன் தந்தையின் நண்பர்தாம் அதற்குரியவர் என்று கூறினேன். அவள் உடனே தன் தந்தைக்கு நெருங்கிய நண்பர்கள் பழக்கம் இல்லையென்றும், அதுவும் உங்கள் பெயரில் யாரையுமே தனக்குத் தெரியாது என்றும் சொன்னாள். முன்பின் தெரியாத தனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்தவரைப் பார்த்து நன்றி கூற வேண்டும் என்றாள். நல்ல பெண். பெற்றோர் இல்லாத நிலையில், இந்த இளம் வயதில் தன் தம்பி, தங்கைக்காக உயிர் வாழ்பவள்” என்று உணர்வுபூர்வமாய்க் கூறினார்.

அப்போதுதான் டாக்டர் கொடுத்த விபரங்களடங்கிய ஃபைலை



பிரித்துப் பார்த்து, அவள் முகவரியைக் கண்டார். “அட இது என்ன புதிய முகவரி? நான் கூறும் மீனாவின் முகவரி இதுவன்று. ஏதோ மாறுபாடு நிகழ்ந்திருக்கிறது. எதுவாயினும் சரி. இறைவன் விருப்பம் என்று நினைப்போம். நான் போய் இந்த மீனாவைப் பார்த்து வருகிறேன் டாக்டர்” என்று புறப்பட்டார்.

இதில் ஏதோ மாறுபாடு நிகழ்ந்திருப்பதாக மீனாவும் கூறியதை டாக்டர் நினைவுகூர்ந்தார். தம் செயலில் எங்கு தவறு நேர்ந்துள்ளது என்று எல்லாவற்றையும் ஒரு முறை சரிபார்த்தார்.

‘இப்போது அங்கு நெஞ்சுவலி என்று வந்திருக்கும் மீனாவின் வைத்தியத்திற்கான செலவு தம் பொறுப்பு என்றும், இது பற்றி அவளிடம் கூறவேண்டாம்’ என்றுதான் இருந்தது.

“சார், நீங்கள் மீனாவின் கேஸை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மெயில் அனுப்பியபோது எங்களிடம் வந்த மீனா இவர்தாம். அதுவும் தவிரவும் இவள் ஏழை. இவள் சிகிச்சைக்குப் பெரும்பணம் தேவைப்பட்டது. எங்களுக்கு நன்கொடை வரும்போது கையிலுள்ள கேசுக்கு அதைப் பயன்படுத்துவோம். நீங்கள் மீனா என்றே குறிப்பிட்டு இருந்ததால் உங்கள் பணத்தை இந்த மீனாவுக்குச் செலவிட்டோம்” என்றார்.

“உங்கள் மீது தவறேதும் இல்லை டாக்டர். இறைவன் செயலே நிகழ்ந்துள்ளது. எதுவாயினும் உங்கள் உதவிக்கு நன்றி” என்று கூறி விடைபெற்றார். உடனே மீனாவின் முகவரிக்குப் புறப்பட்டார்.

விலையுயர்ந்த காரொன்று தங்கள் வீட்டின்முன் வந்து நின்றதும் மீனாவின் தம்பியும், தங்கையும் ஓடி வந்து பார்த்தனர். மீனாவின் குடும்பம் பற்றி டாக்டர்மூலம் அறிந்திருந்ததால் சிறுவர்களுக்குப் படிப்புக்குப் பயன்படும் பொருட்கள், பிஸ்கட், டிரஸ், இவற்றுடன் மீனாவிற்கு ஹார்லிக்ஸ், பழம் யாவும் வாங்கிவந்திருந்தார். பெரிய பார்சலுடன் படியேறி வரும் இவரைப் பார்த்து முன்னர் தெரியாதவர் என்பதால் விழித்து நின்றனர்.

“மீனா அக்கா இருக்கிறார்களா?” என்றார்.

ஓ! அக்காவின் ஆபீஸர்போலும் என்றெண்ணி, உள்ளே ஓடிச்சென்று “அக்கா, உங்கள் ஆபீஸர் உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்” என்று தணிந்த குரலில் கூறினர்.

வெளியே வந்த மீனா முன்பின் அறிந்திராத ஒருவரைப் பார்த்து, புரியாமல் விழித்தாள். இருந்தாலும் மரியாதை கருதி, ‘‘வாருங்கள். நீங்கள் யாரென்று தெரியவில்லை’’ என்று தயங்கி நின்றாள்.

‘‘உனக்கு என்னைத் தெரிய நியாயமில்லை. எனக்கும் உன்னை இப்போதுதான் தெரியும். ஆனால் இறைவனுக்கு உன்னையும், என்னையும் முன்பே தெரியுமல்லவா? என்னை உன் தந்தையின் நண்பராக இங்கு அனுப்பி வைத்திருக்கிறார். என் பெயர் வைத்தியநாதன்’’ என்றார்.

‘‘ஓ! நீங்களா? வாருங்கள், வாருங்கள். நானல்லவோ உங்களை வந்து பார்த்து நன்றி கூறவேண்டும். முன்பின்னறிந்திராத எனக்கு இத்தனை உதவிகள் செய்திருக்கிறீர்கள். நான் எப்படிக் கைம்மாறு செய்வேன்’’ என்று நன்றிப்பெருக்குடன் கூறினாள்.

உள்ளே அழைத்து, இருக்கையில் உட்காரச் செய்தாள்.

‘‘என்ன சாப்பிடுகிறீர்கள் ஐயா?’’ என்று அன்புடன் விசாரித்தாள்.

‘‘என்னை ‘ஐயா’ என்றழைத்து அந்நியப்படுத்தாதேயம்மா. உன்னை இறைவன் எனக்குத் தந்த மகளாகவே நினைக்கிறேன். நீ என்னை ‘அப்பா’ என்றழைத்தால் இத்தகு மகளுக்கு அப்பாவாய் இருப்பதற்குப் பெருமைப்படுவேன்’’ என்றவர் குழந்தைகளுக்குப் பரிசுப்பொருட்களைக் கொடுத்து, பழங்களை அவளிடம் கொடுத்தார்.

என்ன செய்வதென்றே புரியவில்லை மீனாவிற்கு. ‘‘என்னை மேன்மேலும் நன்றிக்கடன்பட வைக்கிறீர்கள்’’ என்று நெகிழ்ந்துருகினாள்.

‘‘இல்லையம்மா. உண்மையில் நாமிருவரும் கடவுளுக்கே கடன் பட்டவர்கள். பெருந்தொகை உன் வைத்தியத்திற்குத் தேவைப்பட்டது. நீ தன்னலமின்றி உன் இளம் தம்பி, தங்கையர் எதிர்காலத்திற்குப் பாடுபடுகிறாய். உனக்கு உடல்நலம் தேவை என்பதை இறைவனறிவான். அதற்குரிய பணம் என்னிடமிருந்தது. அதை அவரே (இறைவனே) உனக்குப் பயன்படச் செய்திருக்கிறார். ஏனெனில் நான் இறைவனாக உணர்ந்த அவதாரம் ஒருவர் உண்டு. அந்தக் கடவுளின் கூற்றுப்படி பணம் யாருக்கும் சொந்தமன்று. அது ஒரு செயல் சாதனம். அதைக் கொடுத்தவனுடைய சித்தப்படியே அதைப் பயன்படுத்தவேண்டும். செலவிடும்போது ஓர் உயர்வுணர்வுடன் செலவிடுவது நலம். அறிவுள்ள முறையில் தனிச்சார்பற்ற முறையில் பயன்படுத்தவேண்டும். பணத்தைப்



பயன்படுத்தவும், பரவலாக்கவும் வல்ல கருவியாக ஒருவன் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். எனவே, நான் இறைவன் சித்தப்படி நடக்க எனக்கு இறையருள் உதவியதாக நம்புகிறேன்’’.

‘‘நீங்கள் சொல்வதைக் கேட்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது. என் அனுபவத்தையும் தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்’’ என்றாள்.

‘‘சொல்லம்மா, சொல். நானும் அதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்’’ என்றார்.

‘‘நான் மருத்துவமனைக்கு நெஞ்சுவலியோடு சென்றபோது, என்னைப் பரிசோதித்த டாக்டர் பிரகாஷ் எனக்கு விரைவில் அறுவைசிகிச்சை செய்ய வேண்டும் என்றும், ஓரளவு அதிகப் பணம் செலவாகும் என்றும் சொன்னார். மலைத்துப்போய், செய்வதறியாது கலங்கி உட்கார்ந்து இருந்தேன். நான் உட்கார்ந்திருந்த இடத்தில் கண்களின் புகைப்படம் ஒன்றிருந்தது. அதைப் பார்த்ததுமுதல் எனக்கு நம்பிக்கை, தைரியம் யாவும் வந்தது. அப்போது என் மருத்துவம் பற்றிய அனைத்துப் பொறுப்புகளையும் டாக்டர் தாமே ஏற்றுக்கொண்டதாக என் தோழி அருணா வந்து என்னிடம் கூறினாள். அந்தக் கண்கள் படத்தின் பின்புறம் என் நெஞ்சைத் தொடுவதுபோன்ற வாசகம் ஒன்றிருந்தது’’ என்று நெகிழ்ச்சியாகக் கூறினாள்.

‘‘கண்கள் படமா? எங்கே, அதைக் காட்டு’’ என்று ஆர்வத்துடன் கேட்டார்.

உள்ளே சென்று அதை எடுத்துவந்து காண்பித்தாள்.

‘‘ஆகா! நீ நினைப்பது சரியே. இது இறைவனின் கண்கள்தாம். நான் இப்போது கூறிய பணத்தைப் பற்றிய கருத்தை யார் கூறினாரோ அவருடைய கண்கள்தாம் இவை’’ என்று கூறினார். ‘‘இவர்தாம் உன்னையும் என்னையும் இணைத்துச் செயல்பட்டிருக்கிறார். மகளே! என் உழைப்பு இறைவன் சித்தப்படியே செலவிடப்பட்டிருப்பதாக நம்புகிறேன்’’ என்றார்.

‘‘அப்படியா? இந்தக் கண்கள் பற்றி முன்பே உங்களுக்குத் தெரியுமா?’’ என்றாள் வியப்புடன்.

அவர் உடனே தம் பர்சை எடுத்துப் பிரித்தார். அதில் ஒரு புறம்

கண்கள் படம், மறுபுறம் கண்களுக்குரிய ஸ்ரீ அன்னையின் முழுவடிவப் படம், இரண்டும் இருந்தது.

"ஓ! இவர்தாம் இந்தக் கண்களுக்குரியவரா? டாக்டர் கூறியது சரிதான்" என்றாள்.

"இந்தக் கண்களுக்கு மட்டுமன்று, இந்தப் பிரபஞ்சத்துக்கே உரியவர் இவர்" என்றார் வைத்தியநாதன்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இதுவரை இவரைப் பற்றி நான் அறியவில்லை" என்றாள் மீனா.

"ஆம். நீ அவரை அறிந்துகொள்ளத்தான் உன் பிரச்சினையில் வாய்ப்பாக வந்துதவியிருக்கிறார். நீ இவரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் சொல்லி விளக்க முடியாது. உன் அனுபவமே ஓரளவு இவரை உனக்குப் புரியவைத்திருக்கும். இவரைப் பற்றிய புத்தகங்கள் நிறைய வைத்திருக்கிறேன். அவற்றைப் படித்தால் நீ மேலும் தெரிந்துகொள்வாய். உன்போல் தன்னலமற்ற தன்மை, உழைப்பு, நேர்மை உள்ளவர்க்கு இவர் மிகவும் பலிப்பார்" என்றார்.

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால் அவர் வலிய என்னை ஆட்கொண்டார் என்று நினைக்கத் தோன்றுகிறது".

"இருக்கலாம் அம்மா. அவர் யாருக்கு எப்படித் தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதை அவரவர் தம் உள்ளுணர்வால்தான் புரிந்துகொள்ள முடியும்" என்றார்.

"நீங்கள் அந்தக் கடவுளை எந்தப் பெயரில் குறிப்பிட்டீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்".

"கடவுளுக்குப் பெயரேது? நமக்குத் தெரிந்தவரை நம் அன்னைதான் நமக்குப் பெரியவர், உயர்ந்தவர், நல்லவர். எனவே, அவரை எல்லோரும் அன்னை என்போம்".

"உண்மைதான். டாக்டர் பிரகாஷ் அவர்களிடம் இந்தக் கண்களைக் காண்பித்தபோது அவரும், அந்தக் கண்களில் ஒரு தாயின் பரிவு தெரிவதாகவும், அதனால் அக்கண்கள் என் அம்மாவினுடையது என்று தாம் நம்புவதாகக் கூறினார். அறிந்தோ, அறியாமலோ அவர்தாம் என் தாய் என்று உணர்த்தினார்போலும்" என்றாள்.

இவ்வாறு ஸ்ரீ அன்னை மீனாவின் வாழ்வில் வெளிப்பட்டார். நேர்மை



உணர்வு சிறிதளவு வெளிப்பட்டாலும் உடனே இறைவன் அந்த ஜீவனைத் தனதாக்கிச் செயல்படுவார் என்பது மீனாவின் விஷயத்தில் உண்மை ஆயிற்று. புத்தகங்கள்மூலம் ஸ்ரீ அன்னையை, அவரின் உயரிய கோட்பாடுகளை அறிந்த மீனா மேலும் தன் மானுடப்பிறப்பின் உயர்வை உணர்ந்து அன்னைக்குத் தன்னை அர்ப்பணித்துச் செயல்பட ஆரம்பித்தாள் என்பதை அன்னையன்பர்களாகிய நீங்களே அறிவீர் எனக் கூறி இக்கதையை நிறைவு செய்கிறேன்.

*முற்றும்*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் செயல்களை யோகச் சட்டப்படி புரிந்துகொள்ளுதல் ஞான யோகம். அதை அன்னையின் சட்டப்படி விளங்கிக்கொள்ளுதல் பூரண ஞான யோகம். நிஷ்காம்ய கர்மத்தால் மட்டும் பூரண கர்மயோகத்தை முடிக்க முடியாது. அதற்கடுத்த கட்டமாகிய சமர்ப்பணம் செய்யப்பட்ட வேலையால்தான் அதைப் பூர்த்தி செய்ய முடியும். இறைவனின் ஆனந்தத்தில் இலயிப்பதால் மட்டும் பூரண பக்தியோகம் பூர்த்தியாகாது. இறைவனை நம் உணர்வில் அனுபவித்தால்தான் அது பூர்த்தியாகும். உடலைத் தூய்மைப்படுத்துவதால் மட்டும் உடலின் யோகம் பூர்த்தி ஆகாது. உடலின் உள்ளே புதைந்துள்ள ஆன்மீகம் வெளிப்பட்டுச் செயல்பட்டால்தான் உடலின் திருவுருமாற்றம் பூர்த்தியாகி, பூரணயோகம் உடலில் பூர்த்தியாகும்.

***உடலின் திருவுருமாற்றம் பூர்த்தியாகி,***
***பூரணயோகம் உடலில் பூர்த்தியாகும்.***

## P.67 He puts on joy and sorrow like a robe.

**சந்தோஷமும் கவலையும் அவன் அணியும் ஆடை.**

- ✡ அனுபவம் அவனுக்கு ஆனந்தம் தரும் மதுபானம்.
- ✡ கனத்த பரப்பு அவன் கடந்த நிலைக்குக் கட்டுப்பட்டது.
- ✡ ஆழ்ந்த மனத்துள் அனைத்தும் அறிபவனாக உறைகிறான்.
- ✡ ஜோதிமயமான மனிதன், தனித்தவன் ஏற்ற தலைமை.

- ✡ பிரம்மம், பூரணன், ஏகன்.
- ✡ மௌனமெனும் மலையை நகர்த்தும் சக்தியை அறைகூவியழைக்கிறது.
- ✡ ரூபமற்ற அமைதி குணமிழந்த நிலையில் அவளை அணைத்துப் பிடிக்கிறது.
- ✡ காலனுக்குக் கரையான நிச்சலன நித்திரை.
- ✡ அவன் தனிமையின் வலிமை சொல்லைக் கடந்தது.
- ✡ பிரம்மம், பூரணன், ஏகன்.
- ✡ காலத்தின் பரப்புக்குள் மௌனமென காலடி எடுத்து வைத்தான்.
- ✡ ஏகன் அநேகன் ஆனதை சிருஷ்டித்தது அவனே.
- ✡ அகண்டத்தின் தனிமை அனைவருள்ளும் நுழைந்தது.
- ✡ காலமும் அவனே, அது பரந்து விரியும் பரப்பும் அவனே.
- ✡ பிரம்மம், பூரணன், அசைவற்ற வலிமை.
- ✡ நம் ஆத்மா என உறையும் அவன்.
- ✡ நம் குறை எனும் முகமூடியை அவன் ஏற்றான்.
- ✡ தசை எனும் இப்பாசறையை தனதென ஏற்றான்.
- ✡ அவனுடைய ரூபம் மனிதனளவில் வார்க்கப்பட்டது.
- ✡ நாமும் தெய்வத் திருக்கோலம் பூண்பது அவன் திருவுள்ளம்.
- ✡ இறைவன் ஏற்ற இசைவான ரூபம்.
- ✡ படைத்தவன் நம்மை மீண்டும் படைத்து நடத்த



- ✡ தெய்வமிட்ட திட்டம் அழியும் மனிதனுள் அமையும்.
- ✡ கண்டம் அகண்டத்தை நாடி உயரும்.
- ✡ காலம் கடந்ததைத் தொடும்.
- ✡ திருவுருமாற்றம் பூமி சொர்க்கத்திற்குப் பட்ட கடன்.
- ✡ இறைவனுக்கு மனிதன் கூட்டாளி.
- ✡ நம்மை ஏற்றவனை நாம் ஏற்க வேண்டும்.
- ✡ நாம் இறைவனின் புத்திரர்கள். நாமும் அவனாக வேண்டும்.
- ✡ நாம் இறைவனின் மனிதன். நாமும் தெய்வமாக வேண்டும்.
- ✡ வாழ்வின் புதிருக்குக் கடவுள் என்பது விடை.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

படைப்பான ஒவ்வொரு செயலும் நாம் ஆரம்பித்ததிலிருந்து நாமே மறைந்து செயலை வெளியிலிருந்து இரண்டாம் பேர் வழியாகப் பார்க்கலாம். அது பேரானந்தம் தரவல்லது.

*இரண்டாம் நபரால் இதையும் சாதிக்கலாம்.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் கரணங்கள் பதப்படுத்தப்பட்டவை. ஒரு பழக்கத்தாலோ, ஒரு திறனாலோ அவை செயல்படுகின்றன. பழக்கத்தை விட்டால், திறனைக் கடந்து வந்தால், கரணத்தின் முழுமையால் செயல்பட முடியும். மனிதன் பரம்பொருளை வெளிப்படுத்த அதுபோன்ற விழிப்பு, தேவை.

*மனிதனின் பிரம்ம விழிப்பு பரம்பொருளை வெளிப்படுத்தும்.*

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**881) சேவை, ஊழியர் என்பவை சேவையில் பெருமைப்படு-பவர்க்கே எழும். சேவையின் நோக்கம் மனிதனை உரு-வாக்குகிறது. சேவை அன்பான ஊழியமானால் மனித நிலை உயரும். நான்கு பகுதிகளில்லாவிட்டால் முழு மனிதன் இல்லை. பிராம்மண, க்ஷத்திரிய, வைஸ்யன் சேவையின்றி, அதுவும் தாம் பெருமைப்படும் அன்பு ஊழியமின்றி முழுமை பெறமாட்டார்கள். கடைசிப் பகுதி என்பதால் இதைத் தயார் செய்வது கடினம்.**

- *ஞானம், வீரம், உற்பத்தி, சேவை ஆகியவற்றுள் சிறந்தது சேவை.*
- *அது சிறப்புற அன்பால் அது நிறைய வேண்டும்.*
- *மனிதன் முழுமைபெற, சேவை சிறந்து அன்பால் நிறைய வேண்டும்.*
- *சிறந்த சேவை அன்பால் நிறைந்து முழுமை பெறும்.*

- மனிதன் அறிவால் மட்டும் வாழ முடியாது என்பதுபோல வீரத்தால் மட்டும் வாழ முடியாது. எந்த ஒரு திறமையால் மட்டும் வாழ முடியாது.
- வாழ எல்லாத் திறமைகளும் வேண்டும்.
- எல்லாத் திறமைகளும் செயல்படும்பொழுது ஒன்று முனைப்பாக இருக்கும்.
- எந்த நேரமும் ஒன்றே முனைப்பாக இருப்பதும் பயன்படாது.
- ஒருவனுக்கு எல்லாத் திறமைகளுமிருந்து, எந்த நேரம் எது தேவைப்-படுகிறதோ அந்த நேரம் அது முனைப்பாக எழுவது மனித வாழ்வு பூரணம் பெறுவது.
- அப்படி நாம் செயல்பட எந்தச் செயலுள்ளும் இந்த நான்கு அம்சங்களும் அவை கலந்திருக்கவேண்டிய அளவு கலந்திருக்க வேண்டும்.
- க்ஷத்திரியனே வீரன் என்றாலும் நாட்டில் நிர்ப்பந்தம் ஏற்பட்ட நேரம் மற்ற ஜாதியினரும் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்ற சட்டம் தமிழகத்திலிருந்தது.
- இப்பொழுது எந்த ஜாதிக்காரனையும் இராணுவத்தில் சேர்த்துப் பயிற்சி அளித்தால் அவன் க்ஷத்திரியனாக செயல்படுவதைக் காண்கிறோம்.
- அதேபோல் எல்லா ஜாதிக்காரர்களும் பேராசிரியராக, போலீஸ் ஆபீஸராக, இன்ஜீனியர்களாக, craftsmen வேலை செய்பவர்களாக வருகிறார்கள். இது அவசியத்தை முன்னிட்டு நடக்கிறது.
- அவசியத்தால் செய்வதை அறிவால் செய்வது நல்லது.
- ஆத்மாவால் செய்வது உசிதம்.
- வளரும் ஆன்மாவால் செய்வது சிறப்பு.
- வளரும் ஆத்மா நம் ஜீவனின் பாகங்களில் எழ, அப்பாகங்கள் விழித்து எழுந்து ஆன்மாவாகி, மேலும் பரிணாமத்தால் மலர்தல் அவசியம்.
- அனைத்தும் அன்பில் முடிகின்றன.
- அன்பு ஆன்மாவின் அதிகபட்ச முயற்சி.

❀❀❀

**882) விரதமும், தவமும் வாழ்வில் இறைவனை சந்திக்க உதவா. முதிர்ந்த அனுபவம் செறிந்த மனப்பக்குவத்தால் இறைவனை வாழ்வில் காணலாம்.**

*முதிர்ந்த அனுபவம், செறிந்த மனப்பக்குவத்தால் ஸ்ரீ அரவிந்த தரிசனம் தவறாது பெறும்.*

- விரதம் கட்டுப்படாத உணர்ச்சியை கட்டுப்படுத்தும்.
- தவம் கடுமை வாய்ந்தது.
- கடுமையான சுபாவம் கனிந்துவரப் பயன்படுவது தவம்.
- ஆசையை அனுபவிக்க மறுப்பது விரதம்.
- அனுபவம் முதிர்வது வாழ்வில் ஆத்மா நிறைவது.
- மனப்பக்குவம்எனில் சிந்தனையின்றி விஷயங்கள் புரிவது.
- ஸ்ரீ அரவிந்தர் கண்டது நாராயண தரிசனம்.

✡ அதில் அர்ஜுனன் கண்ட கோரமில்லை.

✡ அர்ஜுனன் மனத்தால் கண்டான்.

✡ பகவான் சத்தியஜீவியத்தால் கண்டார்.

✡ நாராயணன் (overmind) தெய்வீக மனத்திற்குரியவர் எனினும் அவர் பிறந்தது சத்தியஜீவியம். வேறு சொல் இல்லாததால் நாராயண தரிசனம் என்றார். சுத்த சிவம், சுத்த பிரம்மம், சுத்த விஷ்ணு பிறந்த இடம் சத்தியஜீவியம் என்பதால், அதுவும் சரி எனக் கொள்ளலாம்.

✡ பிடியை விட்டுக்கொடுப்பது,
அடுத்தவர் அபிப்பிராயத்தை ஏற்பது,
பகுதியை முழுமையாகக் கருதுவது,
சிந்திக்காமல் புரிந்துகொள்வது,
பலனுக்காகப் பிரார்த்திக்காதது,
சரணாகதியை எந்தப் பலனுக்காகவும் ஏற்காதது,
முரண்பாட்டை உடன்பாடாகக் கருதுவது,
பிரம்மம் அனைத்துள்ளும் இருக்கிறது,
அனைத்தும் பிரம்மத்துள்ளிருக்கிறது,
அனைத்தும் பிரம்மம்,
ஆகியவை வாழ்வில் இறைவனை காணும் பாதைகள்.

✡ ஆன்மா அசைவற்றது, வெளி வாராது.

✡ ஆன்மா வளர ஆரம்பித்தால் வெளி வரும். வெளி வரும்பொழுது மனமே ஆன்மாவாவது சைத்தியப்புருஷனாகும்.

✡ வாழ்வின் அனுபவம் சமர்ப்பணத்தால் ஆன்மீக முதிர்ச்சி பெறும்.

✡ மனம் மௌனத்தால் பக்குவம் பெறும். அது ஸ்ரீ அரவிந்த தரிசனம் தரும்.

*தொடரும்.....*

❀❀❀

**ஜீவிய மணி**

அநியாயத்தை நியாயமாக்கும் மனிதன்.



"Life Divine" - கருத்து

**தெய்வீக வாழ்வு எளிமையாகவோ, ஆடம்பரமாகவோ இருக்கலாம்.**

✡ பரம்பரையாக உலகெங்கும் துறவி எளிமையான வாழ்வை மேற்கொண்டான்.

✡ ஆடம்பரமான வாழ்வு ஆசையை அனுபவிக்கும் வாழ்வு என்பதால் அதற்கு அனுமதியில்லை.

❀ ஆசை பெண்ணை அனுபவிக்கும்.

❀ பதவி மீது மோகம் எழும்.

❀ பணம் எவரையும் கவரும்.

❀ இவை மூன்றிற்கும் ஆன்மீகத்தில் அனுமதியில்லை.

✡ ஸ்ரீ அரவிந்தம் 'அனுமதியில்லை' என்ற கொள்கையை அனுமதிக்கவில்லை.

❀ அனுமதியில்லை என்ற நிலை சுதந்திரத்தை சுருக்குகிறது.

❀ பிரம்மத்தின் சுதந்திரம் எல்லையற்றது.

பகவான், அந்த சுதந்திரத்தை இழக்கும் சுதந்திரமும் பிரம்மத்திற்கு உண்டு என்கிறார்.

ஒருவகையில் ஸ்ரீ அரவிந்தம் இக்கருத்தையே தன் மகுடமாகக் கொண்டது.

❀ ஆன்மீகம் என்பது ஆத்மாவின் வாழ்வு.

சத்தியம் ஆன்மாவின் புறம்.

ஆன்மா அகமாகவும், சத்தியம் புறமாகவும் சிருஷ்டி ஆரம்பித்தது.

ஆன்மா சத்தின் பகுதி.

**சத் பிரம்மத்தின் பகுதி.**

**பிரம்மம் முழுமையுடையது.**

**முழுமை என்பதற்கு மறுபெயர் சுதந்திரம்.**

**எனவே எளிமை என்ற நிபந்தனைக்கு ஆன்மா உட்படாது.**

**ஆன்மாவே பிரியப்பட்டு எளிமையான வாழ்வை மேற்கொள்வது ஆன்மா தான் சுதந்திரமாகச் செயல்படுவதாகும்.**

***சுதந்திரம் என்ற கொள்கையையும் நிபந்தனையாக ஏற்காதது ஆன்மா என்பது ஸ்ரீ அரவிந்தம்.***

✡ **எளிமை உயர்ந்தது என்பது ஒருவகையில் விவரமற்ற நம்பிக்கை.**

**ஞாபகசக்தி என்பதும் அறிவும் வேறுபட்டவை.**

**ஞாபகசக்தி அதிகமாக உள்ளவனை அறிவாளி என்பது பொருத்தமாகாது.**

**ஆங்கிலம் சரளமாகப் பேசுபவனை அக்காரணத்தால் அறிவாளி எனக் கருதுவது மூடநம்பிக்கை.**

**அதேபோல் ஆன்மீகத்துடன் எந்தத் தொடர்புமற்ற எளிமையை ஆன்மீகச் சின்னமாகக் கருதுவது அறிவுக்குப் பொருந்தாது. அது மூடநம்பிக்கை ஆகும்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒருவர் பெரிதும் விரும்பிப் பெற முடியாததை நாம் கொடுப்பது, யோக வாழ்வில் ஜடத்தின் உதாரகுணமாகும். தம் கட்டுப்பாடு இடம் கொடுக்காததை, அளவு கடந்து ஒருவர் விரும்பினால் அதை மறுப்பது, வாழ்வில் ஜடத்தின் ஆன்மீக உதாரகுணமாகும்.

***கொடுப்பதும் மறுப்பதும் உதாரகுணமாகும்.***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

வாழ்வு முழுவதும் யோகம் என்பதால் வாழ்வுக்குரிய எந்த முறையும் யோகத்திற்குரிய முறையாகும். நேர்மை, திறமை, கடமை, உழைப்பு, நட்புணர்வு போன்ற பல வாழ்வு முறைகளை நாம் அறிவோம். அவை நேரடியாக யோக முறைகளாகாவிட்டாலும், அவை பூரணம் பெறும்பொழுது யோக சக்தி அதன்மூலம் வாழ்வினுள் நுழையும். யோகத்திற்குரிய முறையாக பகவான் கூறுவது ஒரே முறை. அது சரணாகதி. அதை வாழ்வுக்குரியபடி மாற்றி அமைத்தால், பணியவேண்டியவற்றிற்குப் பணிவது என்றாகும். அதை வாழ்வில் சரணாகதிஎனக் கொள்ளலாம். மேலும் பொதுவான மொழியில் கூறவேண்டுமானால் வாழ்வில் அடக்கம் என்பது, யோகத்தில் சரணாகதியாகும். அடக்கம் அர்த்தபுஷ்டியுடையதானால் யோகத்தில் சரணாகதி பெறுவதை, வாழ்வில் அடக்கம் பெறும். கீழே பல முறைகளை எழுதியுள்ளேன். அவை யோக முறை, வாழ்வு முறை, குறிப்பட்ட சுபாவமுள்ளவர்க்குப் பொருந்தும் முறை எனப் பிரிகின்றன. முறை எதுவானாலும், அது நமக்குப் பொருத்தமானதாக இருக்கவேண்டும். நம் சுபாவத்திற்குப் பொருத்தமானதாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட முறையைத் தேர்ந்தெடுத்தால் அது பலன் தரும். முறை முழுவதும் பொருத்தமாக அமைந்தால் பலன் 3 நாளில் உண்டு. அன்பர்கள் அனுபவத்தில் பல ஆண்டுப் பிரச்சினை சில நாட்களில் தீர்ந்ததுண்டு. சில நிமிஷங்களிலும் முடிவு தெரியும். இதற்குரிய நிபந்தனைகள்:

- ❀ **முறை பொருத்தமாக இருக்க வேண்டும்.**
- ❀ **பின்பற்றுவது பூரணமாக இருக்க வேண்டும்.**

தேர்ந்தெடுக்கும் முறையை விவரமாகப் படித்து அறிந்து, அல்லது கேட்டறிந்து மனம் தெளிவுபட்டு, தயக்கமின்றி, குதூகலமாக ஏற்க வேண்டும். அவசரமாகப் பயில ஆரம்பிப்பதைவிட மனத்தைக் கொஞ்ச காலம் கலந்து தயார் செய்து, அது தயாராகும்வரைப் பொறுத்திருக்க வேண்டும்.

- **பயில ஆரம்பித்தால் முன் வைத்த காலைப் பின்வைக்கக்கூடாது.**
- **சரிவு ஏற்பட்டால், முதலிலிருந்து மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.**
- **வெற்றி பெற்றுத் தருவது பொறுமை, நிதானம். அவை குறைவற நிறைவு பெறவேண்டும்.**
- **முறையைச் சரிவரப் பின்பற்றுவது நம் உண்மை Sincerity.**
- **பிரச்சினை எதுவானாலும் தீரும்.**
- **பிரச்சினையற்றவர்க்கு வாய்ப்பு எழும்.**
- **எழும் வாய்ப்பு அவரவர் பர்சனாலிட்டியைப் பொருத்தது.**
- **பர்சனாலிட்டியின் அளவைப் பெரியதாக்கவும் முறையுண்டு. *பிரச்சினை தீர்ந்தபின் முறையைத் தொடர்ந்தால் பர்சனாலிட்டி வளரும்.***
- **எந்தப் பிரச்சினைக்கும் வழியுண்டு.**

  **கற்பனைக்கெட்டாததற்கும் வழியுண்டு.**

  **உயர்ந்த அம்சம் ஒன்றாவது பூரணமாக இருத்தல் அவசியம்.**
- **மௌனம், சாந்தி, தூய்மை, சத்தியம், நல்லெண்ணம், திறமை போன்றவை உயர்ந்த அம்சங்கள். அவற்றுள் சிறப்பானது sincerity உண்மையாகும்.**

தொடரும்.....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் மௌனத்தைத் தேடிப் போவது எல்லா யோகங்களுக்கும் உள்ள நிலை.

***மௌனம் நம்மைத் தேடி வருவது பூரணயோக நிலை.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# The History of USA

A Study of American History அமெரிக்க வரலாறு – ஆராய்ச்சி என்ற தலைப்பில் வந்துள்ள நூல் ஆங்கிலத்தில் உள்ளது.

✡ **பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய யோக தத்துவங்கள் வாழ்க்கைக்கு உரியன.**

✡ **அவற்றை முழுவதும் விளங்கிக் கொள்ள வரலாறு, இலக்கியம், நடைமுறை நிகழ்ச்சிகள், நம் வாழ்வில் கடந்தகால நிகழ்ச்சிகள் உதவும்.**

✡ **இத்தத்துவங்கள் சமூகத்தில் வெளிப்படுவதை 32ஆக சுருக்கியும், 357ஆக விவரித்தும், முக்கியமாக Life Response எனவும் பல வருடங்களாக நான் எழுதி வருகிறேன்.**

✡ **அகதிகளாக அமெரிக்காவைச் சேர்ந்தவர் 1½ வருஷத்தில் வசதியுள்ள மத்தியதர வாழ்வை மேற்கொண்டது 1700, 1800இல் நடந்தவை. அதையே 7 வாரத்திலும் பலர் சாதித்தனர். அதற்குரிய காரணங்கள் பல:**

- ❀ **ஐரோப்பாவைப்போல் அமெரிக்காவில் கூலி 10 மடங்கு.**
- ❀ **அமெரிக்காவில் மனிதன் முன்னேற ஜாதியோ, அந்தஸ்தோ தடை இல்லை.**
- ❀ **விவசாயம் செய்பவருக்கு 640 ஏக்கர் நிலம் இனாமாக அளிக்கப்பட்டது.**
- ❀ **நிலம் 1/3 பாகம் அதிக மகசூல் கொடுத்தது.**
- ❀ **நிலக்கரி, இரும்பு, தங்கம், பெட்ரோல் கிடைத்தால், அது கிடைத்தவருக்கே சொந்தம்.**
- ❀ **அமெரிக்கா natural resources இயற்கை வளம் நிறைந்த நாடு.**

*Contd. in the back cover.....*

# The History of USA

- ❀ **நாட்டில் சர்க்காருக்கு வரி கட்டத் தேவையில்லை.**

இதைப் பெற மனிதன் செய்ததென்ன? நாம் அறியக்கூடியது இங்கு ஏதாவது உண்டா?

- ❀ **தன் நாட்டை விட்டுப் போகும் தைரியம் உள்ளவர்க்கே இந்த வாய்ப்புண்டு.**
- ❀ **100 ஏக்கர் நிலத்தை 400 பேர் பண்படுத்த முயன்றால் வேலை முடியும்பொழுது பாம்பு, விலங்கு, விஷ ஜந்துக்கள், வியாதி, ஆபத்து, கொசு இவற்றிற்கு 300 பேர் பலியானார்கள். அதாவது 1 ஏக்கர் பயிரிட 3 பேர் உயிர் விட வேண்டும்.**
- ❀ **சூரிய உதயம் முதல் இரவுவரை உழைப்பவர் தவிர மற்றவர் அங்கு தேறுவதில்லை.**
- ❀ **ஆபத்து அதிகம். அவரவர் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். பிறரை எதிர்பார்க்க முடியாது.**

அன்பர்கள் இந்நூலைப் படித்தால்,

✡ **மனிதன் உழைப்பால் உலகத்தை ஆண்ட முறையை அறிவார்கள்.**

✡ **அமெரிக்கருடைய உழைப்பு, உடல் உழைப்பு. அவர் பெற்றது அபரிமிதம்.**

✡ **இந்தியர் ஆன்மீக உழைப்பை அயராது நல்க முன்வந்தால், சத்தியம் நிறைந்த ஜீவனுக்கு, திறமையான நிர்வாகம் அமைந்தால் அவர் பெறுவது, இந்தியா ஜகத்குருவாகும் என்பதால் உலகின் பாராட்டுக்கு உரிய உன்னத வெற்றி.**

✡ **அன்னை வாழ்வில் அன்பருக்கு அளிக்கும் வரத்தை பெற இந்நூல் உதவும்.**

❀❀❀